விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

## சங்குநாதம்




சங்கு 26
ஒலி 122 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 07 ஞாயிற்றுக்கிழமை (20.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஆவரங்காலில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்றுச் சனிக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பரமு ஜெயந்தன் (வயது-50) என்ற இரண்டு பெண் பிள்ளைகளின் 20ஆம் பக்கம் பார்க்க



# நாட்டில் இனவாதத்தைத் தோற்கடிக்க புதிய சட்டங்களை உருவாக்க தயங்கமாட்டேன்

### ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

(தலவாக்கலை)

நாட்டில் இனவாதத்தைத் தோற்கடிக்க புதிய சட்டங்களை உருவாக்கத் தயங்கமாட்டேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக்கூட்டம் தலவாக்கலையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"தேர்தலுக்காக கடந்த காலங்களில் மக்கள் பிரித்தாளப்பட்டனர். வடக்கு, தெற்கு, மலையகம் என வெவ்வேறாகப் பிரிந்து வெவ்வேறு கட்சிகளுக்கு 23ஆம் பக்கம் பார்க்க

### தமிழர்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு

# ஜனாதிபதியின் உரையை விமர்சிக்க அருகதையில்லை

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் உரையை விமர்சிக்க அருகதை கிடையாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

### 31 ஆயிரம் பட்டதாரிகளை

## அரச சேவையில் இணைக்க நடவடிக்கை

### அமைச்சர் வசந்த சமரசிங்க

(கொழும்பு)

முப்பத்தோராயிரம் பட்டதாரிகளை பொதுச் சேவையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த நடவடிக் 23ஆம் பக்கம் பார்க்க

### ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி

## குறுகிய காலத்தில் அம்பலப்படுத்தப்படுவர்

### அமைச்சர் வசந்த சமரசிங்க

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் உண்மையான குற்றவாளிகள் மற்றும் சந்தேக நபர்கள் யார் என்பதை பொதுமக்கள் மிகக் குறுகிய காலத்தில் அறிந்து கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் 20ஆம் பக்கம் பார்க்க

## எங்கள் மகனை கொலை செய்துள்ளனர்

### வரணியில் அகால மரணமடைந்த இளைஞனின் பெற்றோர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

எங்கள் மகன் நீரில் மூழ்கி உயிரிழக்கவில்லை. அவரைக் கொலை செய்து விட்டனர் என வரணி சிட்டிவேரம் பகுதியில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த இளைஞனின் 20ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசு மக்களை ஏமாற்றி திசை திருப்பிக் கொண்டிருக்கிறது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(அநுராதபுரம்)

24 மணி நேரமும் பொய் மற்றும் ஏமாற்று வித்தைகள் மூலம் மக்களை திசை திருப்பி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது அநுர அரசாங்கம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமிர்த்தம் அநுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதி பேமடுவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

20ஆம் பக்கம் பார்க்க

### பிள்ளையான் கைது விவகாரம்

## அனுதாபத்தை ஏற்படுத்த உதய கம்மன்பில முயற்சி

### அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி



(கொழும்பு)

பிள்ளையான் கைது விவகாரத்தை வைத்துக் கொண்டு அனுதாபத்தை ஏற்படுத்த உதய கம்மன்பில முயற்சிக்கிறார் என கைத்தொழில் அமைச்சர் சுனில் 23ஆம் பக்கம் பார்க்க

## சொன்னதை செய்யும் அரசாங்கம்

### ரில்வின் சில்வா

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் சொன்னதை செய்யும் ஒரே அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தான் என்று 23ஆம் பக்கம் பார்க்க

### தமிழர் தாயகத்தில் உணர்வுபூர்வமாக

## அன்னை பூபதியின் 37ஆவது நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் உணர்வுபூர்வமாக அன்னை பூபதியின் 37ஆவது நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு இந்திய 23ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேம்படி மகளிர் பாடசாலைக்கான பிரத்தியேக பஸ் பாடசாலை சேவை



**Shan Travels** இன் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வேம்படி மகளிர் பாடசாலைக்கான பிரத்தியேக சொகுசு பஸ் பாடசாலை சேவை ஆரம்பிக்கபடவுள்ளது.

Shan Travels

மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை மாணவர்களுக்கு முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. அப் பிரதேசத்தில் இருப்பவர்கள் இணைந்து கொள்ளலாம்.

இருக்கைக்கு அளவான குளிரூட்டப்பட்ட சேவையாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளுக்கு உடனே அழையுங்கள்.

**077 739 3078** (3960)

## காணி, வீடு விற்பனைக்கு

கைதடியில், கைதடி மானிப்பாய் வீதியில், கைதடி சந்தியில் இருந்து ½Km தூரத்தில் 5 ½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 309 3011** (C-2742)

## வேலையாட்கள் தேவை

கொடிகாமம் நகரில் ஆரம்பிக்கவுள்ள கிசோர் Multy Shop(fancy Shop) இற்கு அனுபவமுள்ள ஆண், பெண் வேலையாட்கள் தேவை. (1042)

**077 811 8948**

## வேலைவாய்ப்பு

### கணக்காளர் (பெண்கள்)

- க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகத்தில் சித்தி
- யாழ். நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்பு : **076 097 3121**

## வேலையாட்கள் தேவை

யாழில் அமைந்துள்ள பிரபல உணவகத்தில் பின்வரும் வேலை வெற்றிடங்கள் உள்ளன. (3973)

- Cook (Srilankan Rice and Curry)
- Kitchen helper - Male/ Female
- Cook (Chinese and indian Style)
- Parotta Master
- Cleaning Staffs

தங்குமிட வசதி, உணவு மற்றும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு :

**076 765 3070**

## காணி விற்பனைக்கு

தீவுப் பகுதியைச் (அல்லைப்பிட்டி) சேர்ந்த

1. வடலித்தோட்டம் (கவறாங்வளவு) பெயருள்ள காணி நிலப்பரப்பு 11 ½ பரப்பு
2. "நரியன் வயலும்", "நரியன் வளவும்" என்ற பெயருள்ள, நெற்பரப்பு 97 பரப்பு, பரப்பு 10 உம், 1 ½ குழியும் உள்ள நெற்காணி
3. நரியன் வயல் பெயருள்ள காணி நிலப்பரப்பு 5 5/8

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

**077 301 3652**
**077 191 9985**
**011 255 5571**

(3923)

## பணிப்பெண் தேவை

யாழில் சிறிய குடும்பமொன்றிற்கு தங்கி நின்று சமையல் மற்றும் வீட்டு வேலை செய்வதற்குப் பணிப் பெண் தேவை. (40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்புகளுக்கு : (3975)

**077 298 7506**

## தேவை

கோப்பாய் பகுதியில் இயங்கும் உணவு உற்பத்தி நிலையத்திற்கு வேலையாள் (பெண்) தேவை. (1044)

தொடர்புகளுக்கு :

**076 167 2824**

## நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!

*Premium Lands with 100% Legal Security*

**8 இலட்சம் முதல்**

* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.



விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!

- முல்லை — எழுதுமட்டுவாழ்
- மருதம் — கிழக்கு அரியாலை
- குறிஞ்சி — மலையகம் (ஹப்புத்தளை நகர்)
- நெய்தல் — மட்டக்களப்பு (வாவிக் கரையோரம்)

ஏப்ரல் 14ம் திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு

**இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!**

இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!

இனிமையான வாழ்விற்கு..! GOOD GIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் **+94 77 743 5557** (C-51)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திருமதி சிவகுமார் பராசக்தி**
(ஓய்வுநிலை அதிபர்)

தனக்காய் வாழாமல் எமக்காய்
வாழ்ந்து தெய்வமாகிய
அம்மா உங்கள் ஆசிகளுடன்
ஏழாண்டுகளைக் கடந்து நிற்கிறோம் (C-2752)

பிறப்பு 02.06.1958 — இறப்பு 07.04.2018

124, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்
077 329 8114

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 23.03.2025 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் யோகேஸ்வரி ஜெயராசா**



தோற்றம் 1953:07:01 — மறைவு 2025:03:23

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 22.04.2025 செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடை பெறும். அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] வீதி,
கதிரிப்பாய், அச்சுவேலி.

077 916 3993
077 579 9476

(1029)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியை நிலைநாட்ட அனைவரும் ஒன்றிணைவோம்

## சஜித் பிரேமதாச அழைப்பு



**(கொழும்பு)**

**வீண் பேச்சுக்களைத் தவிர்த்து நீதியை நிலைநாட்ட உண்மையைக் கண்டறிய அனைவரும் ஒன்றிணைவோம் என எதிர்க்கட்சி தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடவுளின் குமாரனாகக் கருதப்படும் இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் வகையில், உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களைப் போலவே, நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் ஈஸ்டர் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர்.

இயேசு கிறிஸ்து மனித இதயத்தில் உள்ள இருளை அகற்றி, புதிய நம்பிக்கையை வழங்கி, மனித வாழ்க்கையை மாற்றும் திறனை வெளிப்படுத்தியது இதன் சிறப்பம்சமாகக் கருதலாம். ஆனால், 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நமது நாட்டில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சில ஹோட்டல்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட அந்த மனிதாபிமானமற்ற தற்கொலைத் தாக்குதலால் இன்றும் நமது நாட்டின் கத்தோலிக்க மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு, அதைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைப் பெற்ற சில அரசியல் கட்சிகளின் கீழும், தற்போதைய அரசாங்கத்தின் கீழும், இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை வழங்க முடியாததால், 6 ஆண்டுகள் கடந்தும், இந்தத் தாக்குதலில் உயிரிழந்த, கை, கால்களை இழந்த, உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது தெரிகிறது.

தேர்தல் காலத்தில் பல்வேறு தரப்பினரும் இவர்கள் இழந்த நீதியை வழங்குவதாக அரசியல் மேடைகளில் சத்தமிட்டாலும், அதிகாரத்தைப் பெற்ற பிறகு எந்த ஆட்சியாளரும் இவர்களுக்குரிய நீதியை வழங்க விரும்பவில்லை என்பது இன்றும் தெளிவான உண்மையாகும்.

எனவே, வீண் பேச்சுக்களையும், பொய் வாக்குறுதிகளையும் தவிர்த்து, இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் நீதி கிடைக்க அனைவரும் செயற்பட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களையும், பிற்போக்குத்தனமான போக்குகளையும் கடந்து, அனைவரும் ஒன்றிணைந்து நாடாக நல்ல எதிர்காலப் பயணத்திற்காக அணிதிரள வேண்டும் என இறுதியாக அனைவரிடமும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

(நி-8)

# அநுர அரசாங்கத்தை 5 வருடங்கள் ஆட்சி செய்ய அனுமதிக்க மாட்டோம்

## நாமல் சூளுரை



(கொழும்பு)

அநுர அரசாங்கத்தை ஐந்து வருடங்கள் ஆட்சி செய்ய அனுமதிக்கமாட்டோம் என சிறிலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலரை சிறையில் அடைத்து மேலும் பொய்களை கூறி அடுத்த 5 வருடங்களை அரசாங்கம் ஆட்சி செய்ய அனுமதிக்கப் போவதில்லை.

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புவோம்.

அரசாங்கம் தற்போது திருடர்களைப் பிடிப்பதற்கான சட்ட மூலமொன்றை நிறைவேற்றியுள்ளதாகவும், உகண்டாவில் தமக்கு இருப்பதாக அவர்கள் கூறிய பணத்தை கொண்டு வரும் வரை அரசாங்கத்தை நாம் பின் தொடர்ந்து செல்வோம் எனவும் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

(நி-8)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் 56 பாடசாலைகள் உட்பட நாட்டில்

# நூற்றுக்கணக்கான பாடசாலைகள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

**நாட்டில் மாணவர் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ள 100 சிறிய பாடசாலைகளை மூடுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.**

வட மாகாணத்தின் 13 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து 56 பாடசாலைகளை விரைவில் மூடுவதற்கான நடவடிக்கையில் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது.

வட மாகாணத்தில் ஐம்பதுக்கும் குறைந்த மாணவர்கள் கல்வி கற்கும் 266 பாடசாலைகள் உள்ளன என்ற அதிர்ச்சித் தகவலை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நாட்டில் பத்துக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை இப் போது 500ஐ தாண்டி விட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது.

அவற்றில், அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகளில் இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் மட்டுமே உள்ளனர்.

இவ்வாறான பாடசாலைகளை மூடி, அந்த மாணவர் களை வசதிகள் உள்ள பாடசாலைகளில் சேர்ப்பதற்கான முறையான திட்டத்தைத் தொடங்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல சிறிய பாடசாலைகள் மூடப்பட்டு, அவற்றின் மாணவர்கள் தற்போது வேறு பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

மூன்று கிலோமீற்றருக்குள் ஒரு பாடசாலை என்ற கருத்தை மனதில் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. (நி-8)

1978 முதல்
ஈசன்ஸ்
இல.148,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
021 222 2695
077 429 0613
(C-2746)

## ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டி

# 8 பதக்கங்களை வென்று சாதனை படைத்தது இலங்கை

சவூதி அரேபியாவில் நடைபெற்ற ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை 9 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஆசிய தடகள சம்மேளனத்தின் ஏற்பாட்டில், கதீஃப் நகரில் நான்கு நாட்கள் நடைபெற்ற இச் சம்பியன்ஷிப் தடகளப் போட்டிகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தன.

இதில் இலங்கை ஒரு தங்கப் பதக்கம், மூன்று வெள்ளிப் பதக்கங்கள், நான்கு வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 8 பதக்கங்களை வென்று சாதனை படைத்தது.

இதன்படி, போட்டியில் பங்கேற்ற நாடுகளில், குறைந்தபட்சம் ஒரு வெண்கலப் பதக்கமாவது வென்ற 19 நாடுகளில் இலங்கை பதக்கப் பட்டியலில் 9 ஆவது இடத்தைப் பெற்றது.

இப் போட்டியில் இலங்கை வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை, ஆசிய 18 வயதுக்குட்பட்டோர் சம்பியன்ஷிப் வரலாற்றில் இலங்கை பெற்ற மிக உயர்ந்த பதக்க எண்ணிக்கையாகும்.

கடந்த 2023 ஆம் ஆண்டு இப் போட்டித் தொடர் நடைபெற்றபோது, இலங்கை இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 4 பதக்கங்களை மட்டுமே வென்றிருந்தது.

இதேவேளை குறித்த போட்டியில் 19 தங்கப் பதக்கங்கள், 12 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களுடன் சீனா பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ள நிலையில், ஜப்பான் மூன்று தங்கப் பதக்கங்கள், மூன்று வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்துடன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## போதைப்பொருளுடன் மூன்றுபேர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் குஷ் ரக போதைப்பொருளுடன் மூன்று பெண்கள் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போது இப்பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்கள் பாங்கொக்கில் இருந்து நேற்று முன்தினம் இரவு நாட்டிற்கு வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



கைது செய்யப்பட்ட பெண்கள் வெல்லம்பிட்டிய மற்றும் மாளிகாவத்தை பகுதிகளைச் சேர்ந்த 25, 48 மற்றும் 50 [illegible] என ஆரம்பக[illegible] தெரியவந்துள்ளது. (நி-8)

உடனடி வேலைவாய்ப்பு

Tamil Customer Care Executive.
எழுத்து தமிழில் உரையாடும் திறன் அல்லது
யாழ்ப்பாண / மட்டக்களப்பு தமிழ்
பேச்சு வழக்கு அவசியம்.
வயது எல்லை 18-35.
Email CV To : hr.eqsolutions@outlook.com
with subject "Job Code:690 –
Tamil Customer Care Executive"
(C-128)

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 05 . 1950

மறைவு 19 . 04 . 2025

**அமரர். மாணிக்கம் பாலகிருஸ்ணமூர்த்தி**

இலகடி அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் பாலகிருஸ்ணமூர்த்தி அவர்கள் 19.04.2025 அன்று இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், தனலட்சுமியின் (பிள்ளை) பாசமிகு கணவரும், நிருஜா, சாமினி (கனடா), நிலோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிர்மலன், பிரசன்னா (கனடா), சுரேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஆருசா, அக்ஷரா, அக்ஷரன் (கனடா), நிக்சயா, அகானா, ஆதீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும், விநாயகமூர்த்தி (அமரர்-அவுஸ்திரேலியா), சகுந்தலாதேவி, பாரதாதேவி (கனடா), கணேசமூர்த்தி (மாத்தளை), கருணாதேவி, சுந்தரமூர்த்தி (அமரர்-இந்தியா), பஞ்சாட்சரமூர்த்தி (ஆசிரியர்-அமரர்), தெட்சணாமூர்த்தி (அமரர்), பத்மாதேவி, மல்லிகாதேவி (அமரர்), தனலட்சுமிதேவி (ஆசிரியர்-அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 9.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இலகடி, அல்வாய். (C-2747) தகவல் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 489
20.04.2025
பக்கம் 05

# யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி



# தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழி

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளில் தேர்தல் திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அதேநேரம் வேட்புமனுக்களின் நிராகரிப்புத் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களின் பிரகாரம் உரிய பரிகாரங்களைச் செய்ய வேண்டிய கடமைப் பொறுப்பும் தேர்தல் திணைக்களத்திற்கு உண்டு.

படிவங்களை முறையாக நிரப்பி அவற்றைச் சரி பார்ப்பதில் அரசியல் கட்சிகளிடையே இருந்த அசமந்தம் நீதிமன்றப் படி ஏறி வாதிடுகின்ற அளவுக்கு நிலைமையைக் கடினமாக்கியுள்ளது.

அதேநேரம் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் வேட்பாளர்களின் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதில் தவறு விடக்கூடிய அரசியல் கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்றால், எவ்வாறு பொறுப்புடன் நடந்து கொள்ளும் என்ற கேள்விகளும் சமூக மட்டத்தில் இருக்கவே செய்கின்றன.

எது எவ்வாறாயினும் தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரை அவை திருவிழாக் காலக் கடைகள் போலவே இயங்குவதைக் காண முடியும்.

அதாவது, தேர்தல் காலங்களில் மட்டுமே கட்சிச் செயற்பாடுகள், மற்றும்படி மடை திறக்காத ஆலயங்கள் போலவே தமிழ் அரசியல் கட்சிகளும் பூட்டப்பட்டு கிடக்கின்றன.

அதிலும் கட்சி உறுப்புரிமை கொண்ட பதிவேடுகள் கூட தமிழ் அரசியல் கட்சிகளிடம் இல்லை.

இதற்குப் பழம்பெரும் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி நல்லதோர் உதாரணம்.

ஆம், தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவின் போது ஏற்பட்ட குழப்பங்களுக்கு மூல காரணம் உரியவாறான பதிவேடுகள் இல்லாமையாகும்.

இதனால் கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் யார்? மத்திய குழு உறுப்பினர்கள் யாவர்? என்ற விபரங்கள் தெளிவில்லாத போது குழப்பங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததே.

உண்மையில் தமிழரசுக் கட்சி ஒழுங்கு முறையான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருக்குமாயின், ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியில் இல்லாமல் இன்னொரு கட்சியில் இருந்து விட்டு, தமிழரசுக் கட்சிக்குள் இடைப்புகுந்து கொள்கின்ற சந்தர்ப்பங்களும் தடுக்கப்பட்டிருக்கும்.

பரவாயில்லை. நாங்கள் தமிழர், வெறும் பேச்சளவிலேயே எங்களின் நிர்வாகம் இருக்கும் எனும் போது, அதிலிருந்து எவரையும் விதிவிலக்காகப் பார்ப்பது பொருத்தமற்றது என்பதால், அவற்றை ஒருபுறம் வைத்துக் கொள்ளலாம்.

அதேநேரம் எங்கள் அரசியல் கட்சிகளின் ஒழுங்கற்ற நிர்வாகத்தின் விளைவாக, வடமாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி கோலோச்சுகின்ற சூழமைவு ஏற்பட்டுள்ளதென்பதை ஒருபோதும் நாம் மறந்து விடக்கூடாது.

### அநுரகுமாரவின் வடக்கு விஜயம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தனக்கும் தனது ஜே.வி.பிக்கும் தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்குமென ஒருபோதும் நினைத்ததில்லை.

அப்படியாகத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்ற நோக்கிலும் அவரின் அரசியல் பயணம் அமைந்ததில்லை.

ஆனால் காலம் அவரைத் திசை திருப்பியது. அநுரகுமார திஸாநாயக்க என்ற தனி மனிதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற உண்மையை அவர் உணர்ந்து கொள்வதற்கு தேர்தல் பிரசாரம் உதவியது.

ஆம், ஜனாதிபதியாக வெற்றி பெற்ற அநுரகுமார திஸாநாயக்க பொதுத் தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறார்.

யாழ்ப்பாணம் பாசையூர் அந்தோனியார் தேவாலய முன்றலில் உள்ள மைதானத்தில் மாலைப்பொழுதில் பிரசாரக் கூட்டம்.

ஜனாதிபதி அநுரவை காண வேண்டும் என்பற்காக மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

என்னே அதிசயம்! ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிக்காத தமிழ் மக்கள்; அவர் ஜனாதிபதியாக வெற்றி பெற்றதும் இத்துணை ஆவலோடும் ஆரவாரத்தோடும் கூடியிருக்கின்றனர்.

இங்கு தான் ஓர் உண்மையை ஜனாதிபதி அநுர உணர்ந்து கொள்கிறார். அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்காமைக்குக் காரணம், அவர்கள் தன் மீது கொண்ட வெறுப்பன்று.

மாறாக, சிங்கள மக்கள் தன்னைத் தெரிவு செய்வார்கள் என்ற உண்மை தெரியாததாலேயே தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்கவில்லை.

வெற்றி நிச்சயமில்லாத ஒருவரை ஆதரிப்பதென்பது, தமது எதிர்காலத்திற்கு ஆபத்தாக அமையலாம் என்ற காரணத்தாலேயே தமிழ் மக்களின் வாக்குகள் தன்னை நோக்கி வரவில்லை. அவர்களின் நிலைப்பாட்டில் நியாயம் உண்டு என்ற மெய்ப்பொருளை அநுர உணர்ந்து கொண்டார்.

உண்மை. இங்கு தான் பாசையூர் கூட்டம் ஒரு பெரும் திருப்பு முனையை ஏற்படுத்துகிறது. தமிழ் மக்கள் ஊழலை எதிர்க்கின்றனர். அவர்கள் சிங்கள ஆட்சியாளர்களை எதிர்க்கவில்லை- சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களையே எதிர்க்கின்றனர் என்ற தத்துவம் ஜனாதிபதி அநுரவினால் உணரப்படுகின்றது.

தமிழ் மக்கள் தன் மீது காட்டுகின்ற பாசத்திற்குள்; கடந்த கால ஆட்சியாளர்கள் தங்களுக்குச் செய்த அக்கிரமத்தின் அனுபவிப்புக்கள் தெரிவதை உணர்ந்து கொண்ட அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் மக்கள் தனக்கான ஆதரவுச் சக்தி என முடிவு செய்கின்றார்.

ஆம், யாழ்ப்பாணத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களைப் பெற்று சாதனை படைக்கிறது.

இந்தச் சாதனைக்கு ஒரே காரணம் அநுரகுமார திஸாநாயக்க என்ற தனிமனிதன் என்பது அடிக்கோடிடப்பட வேண்டிய விடயமாகும்.

### ஜனாதிபதி அநுரவின் அணுமுறை

பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றது தென்பகுதியில் பெரும் திகைப்பை ஏற்படுத்தியது.

நேர்மையான சிங்களத் தலைவனை ஏற்றுக் கொள்வதற்குத் தமிழ் மக்கள் தயாராக உள்ளனர் என்ற உண்மையை தென்பகுதி மக்கள் உணர்ந்து கொள்கின்றனர்.

தவிர, அநுரகுமார திஸாநாயக்கவைத் தாம் தெரிவு செய்ததன் மூலம், தமிழ் மக்களிடம் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளோம் எனச் சிங்கள மக்கள் திருப்தியடைந்தனர்.

இவற்றின் விளைவாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை தெற்கிலும் தமிழர் தாயகத்திலும் கூறுவது அநுரவுக்கு அவ்வளவு கடினமாக இருக்கவில்லை.

ஆம், உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரத்திற்காகக் கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். அவரின் உரை தமிழ் மக்களை வாலாயப்படுத்துவதாக இருந்தது.

- புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு
- இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் உள்ள காணிகள் விடுவிக்கப்படும்.
- தையிட்டி திஸ்ஸவிகாரை தொடர்பில் விரைந்து தீர்வு எட்டப்படும்.
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வேதனையை நான் நன்கு அறிவேன். என் உடன்பிறந்த சகோதரன் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். அதன் வலி எத்தகையது என்பது எனக்குத் தெரியும். ஆகையால் காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன என்பது பகிரங்கப்படுத்தப்படும்

என்றவாறு ஜனாதிபதி அநுர தனது உரையை ஆற்றியிருந்தார்.

எனினும் அவர் ஆற்றிய இந்த உரை தொடர்பில் தென்பகுதியில் எந்தப் பிரதிபலிப்பும் ஏற்படவும் ஏற்படுத்தப்படவும் மாட்டாது என்பது தான் இங்கு ஈண்டு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார் வைத்திலிங்கம்** தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். 2019 ஆம் ஆண்டில் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் ஈஸ்டர் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் ஆலடியில எங்கட பொது மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு முதன்மை கொடுக்க வேணும். உதாரணத்திற்கு எங்கட உள்ளூர் விவசாயிகள் தங்கட விளை பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்கின்ற பரிதாபத்துக்கு ஆளாகி இருக்கினம்.

அதேநேரம் விவசாயிகளிடம் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்த மரக்கறிகள், வாழைக் குலைகள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைகளிலும் கடைகளிலும் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுகுது. எனினும் இந்த விடயம் பேசப்படாமல் இருக்கிறது.

எனவே இது பற்றி ஆலடியில நாங்கள் முதன்மைப்படுத்த வேணும்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. எங்கட விவசாயிகள் வெயிலில் காய்ந்து ஏகப்பட்ட காசைக் கொட்டிச் செலவழித்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய, அவற்றை வியாபாரிகள் அறா விலைக்கு வாங்கி கடும் விலைக்கு விற்று தாங்கள் உச்ச இலாபம் அடைகினம்.

ஆகையால, உற்பத்தி செய்த விவசாயி தானே சந்தையில இருந்து விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேணும்.

**காங்காணி:** அது தானே உழவர் சந்தை



## மழையால் பெருநட்டமடைந்த வெங்காயச் செய்கையாளர்கள்

என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாகச் சொல்லுகினம்.

**விதானையார்:** இஞ்சே கங்காணியார். உழவர் சந்தையெல்லாம் சரிவரப் போறதில்லை. அந்தக் காலத்தில இருந்து உழவர் சந்தை பற்றித் தான் பேசப்படுகுது.

ஆனால் நடைமுறையில உழவர் சந்தை தோல்வியிலதான் முடிந்திருக்குது.

**காங்காணி:** அப்ப இதுக்கு என்ன தான் செய்யிறது.

**வாத்தியார்:** ஒவ்வொரு மரக்கறிச் சந்தைகளிலும் ஒரு பகுதியை விவசாயிகளுக்கு என ஒதுக்க வேணும்.

உதாரணத்திற்கு திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் என அங்கிருக்கக்கூடிய மரக்கறிச் சந்தைகளில ஒரு பகுதியானது, விவசாயிகள் தங்களின் விளை பொருளை விற்பதற்கு என ஒதுக்குவதுடன் அவர்களுக்கான நிலவாடகை மிகக் குறைவாக இருக்க வேணும்.

அதோட விவசாயிகள் தங்கட விளை பொருட்களை விற்பனை செய்கின்ற பகுதியைக் குத்தகைக்கு விடாமல் சம்பந்தப்பட்ட பிரதேச சபைகள் தமது கட்டுப்பாட்டில வைத்திருக்க வேணும்.

இல்லையெண்டால், இந்தத் திட்டமும் தோல்வியில தான் முடிந்து போகும்.

**சாத்திரியார்:** உண்மை தான். எங்கட விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இங்கு இல்லை.

இந்த முறை காலம் தப்பிப் பெய்த மழையால எங்கட வெங்காயச் செய்கையாளர்கள் கடும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். இருந்தும் வெங்காயச் செய்கையாளர்களைக் காப்பாற்றுவதற்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை.

**சிறாப்பர்:** சாத்திரியார் சொல்லுறதில உண்மை இருக்கத்தான் செய்யுது. எங்கட மண்ணில விவசாயக் காப்புறுத்தித் திட்டங்கள் இருந்தாலும் அவை தொடர்பான விழிப்புணர்வுகள் விவசாயிகளிட்ட இல்லை.

ஆகையால, விவசாயக் காப்புறுதிச் சபைகள் விவசாயிகளைச் சந்தித்து விவசாயக் காப்புறுதியின் அனுகூலங்களைத் தெரியப்படுத்தி, ஒவ்வொரு விவசாயச் செய்கைக்கும் காப்புறுதி செய்வதற்கு ஊக்குவிக்க வேணும்.

**மூப்பர்:** சாத்திரியார் சொல்லத்தான் ஞாபகத்துக்கு வருகுது. கடற்றொழிலாளர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றை அநுர அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருக்குது.

உண்மையில கடற்றொழிலுக்குச் செல்லுகின்ற கடற்றொழிலாளர்கள் கடலில எத்தனையோ ஆபத்துக்களைச் சந்திக்கினம்.

ஆகையால, அவர்களுக்கு நிச்சயம் காப்புறுத்தித்திட்டங்களை அமுல்படுத்தத்தான் வேணும்.

அதேநேரம் இப்ப கடல் உணவுகளை சில கம்பனிகள் கொள்வனவு செய்யிறதால சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு நியாயமான விலை கிடைக்குது. உண்மையில இது வரவேற்கப்பட வேண்டும்.

அதேநேரம் எங்கட கடலில பிடித்த மீன், இறால், நண்டு வகைகளை நாங்கள் எங்கட சாப்பாட்டிற்காக வாங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமையும் இருக்கத்தான் செய்யுது.

**பண்டிதர்:** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா, பொதுவில கடலுக்குச் சென்ற மீனவர்கள் கரைக்கு வரும் போது அங்கேயே வைத்து தரமான மீன், நண்டு, இறால் என்பவற்றை கடல் உணவுகளை ஏற்றுமதி செய்கின்ற கம்பனிகள் கொள்வனவு செய்துவிடுகின்றன.

இறுதியில அவர்கள் கழித்துவிட்டவற்றைத்தான் நாங்கள் வாங்கக் கூடியதாக இருக்கிறது.

ஆகையால, உள்ளூர் மக்களுக்கும் தரமான நண்டு, இறால், மீன் கிடைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேணும்.

**கங்காணி:** மூப்பர் சொல்லுறது உண்மைதான். நாங்கள் சந்தைகளுக்குப் போய் நண்டு, மீன் கேட்டால் எங்களைத் திரும்பியும் பார்க்காயினம். அங்க கொட்டில்கள் அமைத்து நண்டு, இறால்களை நிறுத்து வாங்குவதில சம்பந்தப்பட்ட கம்பனிகள் முழுமூச்சில ஈடுபட்டிருப்பினம்.

பிறகென்ன? நாங்கள் வெறுங்கையோட வீடு போக வேண்டியதுதான். ஆகையால உள்ளூர் நுகர்வோர் தாம் விரும்பிய தரமான கடல் உணவுகளை வாங்குவதற்கு ஏற்ற வழிமுறைகளை கடற்றொழிலாளர் சங்கங்கள் செய்ய வேணும்.

இதை விட்டிட்டு தரமான தேயிலையை வெளிநாட்டிற்கு அனுப்பிப் போட்டு அடிமட்டத் தேயிலையை நாங்கள் நுகர்வது போல, தரமான நண்டு, இறால், மீன் வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு, குறைந்த மீன் வகைகளை நாங்கள் நுகருகின்ற மிக மோசமான நிலைமை இருக்கக் கூடாது.

இவ்வாறு காங்காணி கார்த்திகேயன் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் வெளிப்படுத்தப்படுவார்களா?

அபிமன்பு

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இலங்கை வரலாற்றில் கறைபடிந்த நாள். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இயேசு பிரான் உயிர்த்தெழுந்த நாளில் அப்பாவி உயிர்களை மனித வெடி குண்டினூடாக பலியெடுத்த நாள்.**

"மரியாள் கல்லறை வந்தபோது
ஒளியின் தூதர் அவரிடம் சொன்னார்
இயேசு உயிர்த்தெழுந்தார் சென்று அறிவித்திடு
சீடர்கள் ஒன்றாய் இருந்த வேளை
மரியாள் அவர்களிடம் மகிழ்ந்து சொன்னார்
கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் சென்று அறிவித்திடு
உயிர்ப்புச் செய்தி உலகில் பகிர்வோம்
நாளும் மகிழ்ந்திடுவோம்"

என தம்மை மறந்து தம் பாவங்களை ஏற்கும் பிரானை, அவர் தூய ஆவியை நினைந்துருகி வழிபாடாற்றியவர்களை மனித வெடிகுண்டு வைத்து கொலை செய்யும் அளவில் மனித குரோதம் புற்றெடுத்து விட்டதை இலங்கைத் தாய் கரமேந்தி கறை படிந்து நின்றாள்.

அன்றைய காலை எப்போதும் போலவே விடிந்தது. இன்று எம் தேவன் உயிர்த்தெழுந்த நாள் என, புத்தாடை உடுத்தி முழந்தாளில் மண்டியிட்டு எல்லாம்வல்ல கர்த்தரே! எம் பாவங்களை மன்னிப்பீராக! என்று மன்றாடிய வேளை மனித வெடிகுண்டு வெடித்திட, தன் இரத்தத்தினால் பிறர் பாவம் கழுவிய இயேசு பிரானை மனித இரத்தம் குளிப்பாட்டியது. அன்றைய தினம் காலை 8.30 தொடக்கம் 9.15 இற்குள் மூன்று கிறிஸ்தவ தேவாலயங்களையும் மூன்று பிரபல நட்சத்திர ஹோட்டல்களையும் இலக்கு வைத்து இக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இக்கொடும் தாக்குதலில் 39 வெளிநாட்டவர்கள் உட்பட 253 பேர் பலியாகியதுடன் 500இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகாயங்களுக்குள்ளாகினர். குறித்த தாக்குதலை தேசிய தவ்கீத் ஜமாத் அமைப்பு மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இக் குண்டுத்தாக்குதல் இலங்கை அரசின் பாதுகாப்பு பலவீனத்தை உலக அரங்கிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டியதுடன் குறித்த தாக்குதல் தொடர்பில் ஏலவே உளவுத்துறையினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததும் இது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு தகவல் வழங்கியிருந்ததாகவும் அப்போது பல குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

ஆயினும் மைத்திரிபால சிறிசேன குறித்த குற்றச்சாட்டை அடியோடு மறுத்திருந்தார். நல்லாட்சி அரசு என்ற அடைமொழியுடன் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் வீழ்ச்சிக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மிக முக்கியமான காரணியானது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மைத்திரிபால சிறிசேன இழப்பீடு வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையும் அதில் பாதியை மைத்திரிபால சிறிசேன செலுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. நல்லாட்சியின் வீழ்ச்சி ராஜபக்ஷக்களின் ஆட்சியை சிங்கள மக்கள் விரும்புவதாய் அமைந்திட, கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் ஜனாதிபதியானார். மகிந்த ராஜபக்ஷ பிரதமரானார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களை உடன் வெளியிடுவேன். சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனையைப் பெற்றுக்கொடுப்பேன் எனக் கூறி அரியணை ஏறிய கோட்டாபய ராஜபக்ஷ அதற்குப் பின்னடிக்க, பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை அரசு வெளியிட வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை விடுவித்து வந்தார்.



ஆயினும் அது நடைபெறாத நிலையில் கோட்டாபய அரசு மீது அதிருப்தி கொண்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோட்டாபய அரசுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கத் தவறினால் நாம் சர்வதேச உதவியை நாடுவோம் என பகிரங்கமாக கூறியிருந்தார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கீடு கோட்டாபய ஆட்சியை வீழ்த்தியது என்று கூறிக்கொண்டாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கோட்டாபயவின் வீழ்ச்சிக்கு மிக முக்கிய காரணியாக அமைந்தது என்பதை எவராலும் மறுத்துவிடமுடியாது.

இப்போதுதான் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்கிறார். அவரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளை வெளியிடுவேன் எனக் கூறிக்கொண்டாலும் அவராலும் அதைச் செய்யமுடியவில்லை. இந்நிலையிலேயே நாட்டில் பாரிய ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

இது இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத வரலாற்று ஆட்சி மாற்றம். ஆம், நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஒரு போராட்டக் குழுவின் தலைவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நாம் ஆட்சிக்கு வந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை வெளியிடுவோம், அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்போம் என தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார் அநுரகுமார திஸாநாயக்க. அநுர அரசின் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பல உண்மைகள் வெளியாகும் என கர்தினால் முதல் சாதாரண பொதுமக்கள் வரை நம்பினர். அதன் தொடர்ச்சி தற்போது அது தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் கைது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையது என அரசாங்கம் அறிவித்திருக்கிறது. பிள்ளையான் கைது செய்யப்பட்டதும் பல தெற்கு அரசியல் தலைவர்கள் பிள்ளையானை பார்வையிட அனுமதி கேட்டிருந்ததான செய்திகள் வெளியாகியிருந்தன. இவை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன. பிள்ளையான் கைது செய்யப்பட்டதற்கும் தெற்கின் அரசியல் தலைவர்கள் பலர் பிள்ளையானைச் சந்திப்பதற்கு துடிப்பதற்கும் இடையில் என்ன இருக்கும் என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். இலங்கையில் பயங்கரவாதம் அழிக்கப்பட்ட தாய் கூறியவர்களே இலங்கையில் பயங்கரவாதத்தைத் தோற்றுவித்தனரோ எனும் கோணத்தில் அரசு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

**வால்களுடன் நின்றுவிடாது வால்களினூடே தலைகளைக் கண்டு பிடித்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.**
**அப்போதே தேவனில் சிந்தப்பட்ட மனித இரத்தம் சுத்திகரிக்கப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

**52**

## செங்கை ஆழியான்

அதனால் நால்வர் உடனடியாகப் பலியாகினர். 3 பொலிஸ்காரர் உட்பட 32பேர் காயங்களுக்குள்ளாகினர். மிக மோசமான ஷெல் தாக்குதல்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மீது கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது 30, மார்ச், 1987 அன்றாகும். 19 ஆம் 20 ஆம் வார்ட்டுகளில் காயம் பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கட்டில்களில் காயங்களுடன் படுத்திருந்த வேளையில் கோட்டையிலிருந்து ஷெல் ஏவப்பட்டது. அது அந்த வார்ட்டுகளில் விழுந்து பயங்கரமாக வெடித்தது. ஒன்பது நோயாளிகள் உடல் சிதறி கருகி மரணமடைந்தனர். 6 வயதிலிருந்து 64 வயது வரையிலான சடலங்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. அந்த வார்ட்டுகளில் காயம் அடைந்தவர்கள் அனைவரும் சரிந்து கிடந்தனர்.

பிணக்குவியலாக அந்தப் பிரதேசம் காணப்பட்டது. "திட்டமிட்ட படுகொலைகள்" என யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி தீர்ப்பு வழங்கினார். யாழ்ப்பாணக் கோட்டை இராணுவத்தினரின் மிகக் கொடூரமான செயல் இதுவாகும்.

30. ஒக்டோபர். 1986 இல் மத்திய கல்லூரிப்பக்கமாக. யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலிருந்து இராணுவத்தினர் கடும் துப்பாக்கி வெட்டுகளைத் தீர்த்தனர். சரமாரியாகத் துப்பாக்கிச் சன்னங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வெடித்தன. பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பாகத் தரைகளில் படுத்துக் கொண்டனர். வகுப்பு மாணவர்களைப் பாதுகாப்பாகத் தரையில் படுக்குமாறு கூறிக்கொண்டிருந்த மாணவர் தலைவன் பொ. விபுலானந்தன். பாய்ந்து வந்த துப்பாக்கிச் சன்னத்திற்கு இரையாக நேர்ந்தது. விபுலானந்தனின் இடது பக்க முதுகில் பாய்ந்த சன்னம் அவர் உயிரைப் பலியெடுத்தது. காலை 7 மணியிலிருந்து 3 மணி வரை கல்லூரிகள் பக்கமாக எதுவித ஆயுதப்பிரயோகமும் நிகழ்த்த மாட்டோம்" என்ற வாக்குறுதியை யாழ்ப்பாணக் கோட்டை இராணுவக் கப்ரன் கொத்தலாவல தந்திருந்தார். அது மீறப்பட்டது.

யாழ்ப்பணக் கோட்டை முற்றுகையின் போது யாழ்பாணக் குடா நாட்டுத் தளபதி கிட்டுவும் கோட்டை முகாம் இராணுவ அதிகாரிகளும் இடைக்கிடையே பேசிக் கொள்ளவதுண்டு, யாழ் பாணக் கோட்டைக்குரிய தண்ணீர் விநியோகம் குழாய் வழியானது. அது நிறுத்தப்பட்டபோது கப்டன் கொத்தலாவல தலைப் புலிகளின் தளபதி கிட்டுவுடன் பேசி, மனிதாபிமான ரீதியில் தண்ணீர் பெற்றுக் கொண்டார். ஒரு தடவை "வயர்லஸ் மூலம் தங்களுக்கு இரு லொறி விறகும், மாம்பழங்களும் அனுப்பிவைக்கும் படி கோட்டை இராணுவத்தினர் இரந்தனர். விடுதலைப்புலிகளினால் ஒரு லொறி விறகு அனுப்பப் பட்டது. யாழ்கோட்டை இராணுவக் கப்டன் கொத் தலாவலயும் தளபதி கிட் டுவும் கோட்டை வாசலில் பேசிக் கொண்ட சம்பவங்கள் சில உள்ளன. (தொடரும்)

# மரக்கலமல்ல.. மனக்கலம்




## கடற்புறா

மனிதன் ஆந்தையா. உள்ளத்தில் சஞ்சலம் இருந்தாலும் வறட்டுச் சிரிப்பை உதடுகளில் வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டு கேட்டாள் மஞ்சளழகி. "விளையாடாதே மனிதன் ஆந்தையல்ல."

அப்படியானால் ஏன் பதறுகிறீர்கள்? இங்கு ஒருவன் வந்திருக்கிறான். அவன். அவன் ஆந்தை போல் கூவுவானாக்கும். "ஆம். கூவுவான்." அவனை எனக்குத் தெரியும். "தெரியுமா? எங்கு போய்விட்டான்?" "எங்கும் போகவில்லை. இங்குதான் இருக்கிறான்."

"எங்கே? எங்கே?" இப்படிக் கேட்டுக்கொண்டு சுற்று முற்றும் நோக்கினான் பலவர்மன். "இங்கே! இங்கே," என்று அது வரை மறைத்து வைத்திருந்த கடற்சிப்பியைக் காட்டினாள் மஞ்சளழகி." அதை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்ட பலவர்மன் மிகுந்த சந்தேகத்துடன் மகளை நோக்கினான். "இதை நீதான் ஊதினாயா?" என்றும் கேட்டான். "ஆம்." என்றாள் மஞ்சளழகி. "இது ஏது உனக்கு?" கடுமையுடன் எழுந்தது பலவர்மன் கேள்வி. "இங்கு மரத்தடியில் கிடந்தது" என் றாள் அவள்.

பலவர்மன் பெரும் சுமையை இறக்கியவன் போல் பெரு மூச்சு விட்டான். அத்துடன், "மடையன்! மடையன்! எத்தனை அஜாக்கிரதை! நல்லவேளை, இது இவள் கையில் கிடைத்ததே," என்று சற்று இரைந்தே சொன்னான்.

"யார் போட்டுவிட்டது இதை?" என்று கேட்டாள் அவள். "இடும்பன்.." என்று வாய் தவறி அசப்பில் சொல்லி விட்ட பலவர்மன் சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு. "யாராயிருந்தால் உனக்கென்ன? வா உள்ளே!" என்று அவளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு மாளிகை நோக்கி நடந்தான். மனத்தில் பல யோசனைகள் அலைபாய அவனுடன் சென்றாள் அன்று மஞ்சளழகி. அந்த இரவின் நிகழ்ச்சிகள் அவள் மனத்தை விட்டு அகலவேயில்லை. நான்கு நாட்களுக்குப் பிறகு கடற்கரையில் உலாவிய போது கூட ஏதோ நாடகம் நடப்பது போல் அவள் மனக்கண்ணில் அந்தச் சம்பவம் எழுந்து உலாவிக் கொண்டிருந்தது! இடும்பன் உச்சரித்ததிலிருந்து பல விடயங்கள் அவளுக்கு வெட்ட வெளிச்சமாயின. மெல்ல மெல்ல கொள்ளைக்காரர்களை விசாரித்ததில் சூளு இனத்தார் கடலோடுபவர்களால் தான்.

கடலாழத்தில் இருந்து ஏதோ புதுவிதக் கடற்சிப்பியை எடுத்து வருவது வழக்கமென்றும் அதில் ஊதல் செய்து ஊதி, தங்கள் சகாக்களை அழைப்பது வழக்கமென்றும் அறிந்தாள் மஞ்சளழகி. என்ன காரணத்தாலோ சூளுக்களின் தலைவனான இடும்பன் தனது தந்தையை நந்தவனத்துக்கு அழைத்திருக்கிறானென்றும், போகும்போது தவறிக் கடற்சிப்பியைப் போட்டு விட்டுப் போயிருக்க வேண்டுமென்றும் அனுமானித்தாள் அவள்.

ஆனால் அந்தச் சிப்பி இளைய பல்லவனிடம் எப்படி அகப்பட்டது? அதை ஊதும் முறை அவனுக்கு எப்படித் தெரிந்தது என்ற விடயங்களை மட்டும் அவளால் ஊகிக்க முடியவில்லை. இடும்பன் தானாகவே வந்து தந்தையைக் காண முயன் றானா அல்லது தந்தை தான் அவனை வர வழைத்தாரா? வரவழைத்தால் இளைய பல்லவன் நகரத்தைச் சுற்றி ஏற்படுத்தியிருக்கும் கடுங்கா வலை மீறி அவன் எப்படி வர முடிந்தது? இப்படிப் பல கேள்விகளைக் கேட்டும் அவளுக்கு ஏதும் பதில் கிடைக்கவில்லை. ஒன்று மட்டும் அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. அனைவரையும் மீறிய பெரும் மர்மம் அக்ஷயமுனையை வளைத்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பலவர்மன், இளையபல்லவன் ஆகிய இருவரில் ஒருவரோ இருவருமோ காரணம், என் பதுதான் அது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்



தையிட்டி விகாரை பிரச்சினைக்குப் போரா டுபவர்கள் ஏன் நீதிமன்றம் செல்லவில்லை.

ஈஸ்டர் தாக்குதலில் இன்னும் நீதி கிடைக்காதது ஏன் வியாசரே?

**தலையில் பொடுகைக் குறைப்பது எப்படி வியாசரே?**

அஸ்வின்-கோப்பாய்

அடப் பாவிங்களா? எப்படி இருந்த மனுசனை (வியாசர்) கடைசியில தலையில பொடுகைக் குறைப்பது எப்படி என்று கூறு மளவிற்குக் கொண்டு வந்து விட்டீர்களே?

எனக்கும் இதே பிரச்சினை இருந்தது. எத்தனையோ மருத்துவம் செய்தும் சரிவர வில்லை.

முடி கொஞ்சம் கொஞ்சமாக கொட்டத் தொடங்கியது. தலையில் முழுவதுமாக முடி கொட்டி விட்டது.

என்ன அதிசயம் இப்போது பொடுகுத் தொல்லையே இல்லை.

**ஈஸ்டர் தாக்குதலுக்கு இன்னும் நீதி கிடைக்காதது ஏன் வியாசரே?**

நந்து-யாழ்ப்பாணம்

நீதி கிடைக்க வேண்டும் என்பதில் நூறு வீதம் உறுதியாக இருக்கின்றோம்.

ஆனாலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்பு நடந்தேறியது. பல்லாயிரக் கணக்கான அப்பாவி உயிர்கள் பறி போயின.

போர்க் குற்ற மீறல்கள் தாராளமாக நடந்தேறின. இவற்றுக்கும் நீதியான தீர்வை தந்தாக வேண்டியது அரசின் கடமை யல்லவா?

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோருபவர்கள் தமிழ் இனத்தின் அழிப்புக்கு நீதி கோரவில்லை என்பது கவலையளிக்கும் விடயம்.

**சுத்துமாத்தின் அடுத்த வெளியீடு என்னவாக இருக்கும் வியாசரே?**

மாவை-அசோகன்

பாம்பை வைத்து வித்தை காட்டுபவரை பார்த்திருப்பீர்களல்லவா? கூடைக்குள் இருக் கும் அந்த பாம்பு மகுடிச் சத்தம் கேட்டதும் எழுந்து ஆடத் தொடங்கும்.

இடையிடையே அதற்கும் கோபம் வந்து சீறும். அத்துடன் பாம்பாட்டியை கொத்தவும் செய்யும்.

பாம்பாட்டிக்குக் கொத்திவிட்டதே என்று அங்கு நிற்பவர்கள் பயத்தில் உறைந்தி ருப்பார்கள்.

ஆனால் அந்தப் பாம்பிற்கு பல் பிடுங் கப்பட்டு பல வருடங்கள் ஆகி விட்டது என்பது பாம்பாட்டிக்கு மட்டுமே தெரியும்

**சந்தேகம் கேட்பது தவறா வியாசரே?**

துஸ்யந்தினி-யோகபுரம்

சந்தேகம் கேட்பது தவறில்லை. ஆனால் கேட்கும் சந்தேகம் பல சந்தேகங்களை எழுப்புவது போல இருந்துவிடக் கூடாது.

நீங்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு எதிர்தரப்பிடம் சரியான பதில் வருமாக இருந்தால் அது அந்த சந்தேகத்தை தீர்ப்ப தாக அமையும்.

உங்களால் கேட்கப்படும் சந்தேகத்திற்கு பதில் கோபம் வருமாக இருந்தால் ஒன்றில் உங்கள் சந்தேகம் தவறானதாக இருக்கும். அல்லது அந்த சந்தேகம் அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.

ஏதும் புரிகிறதாக துஸ்யந்தினி!




**உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அநுர அரசுக்கு வெற்றி கிடைக்குமா?**

கஜேந்திரகுமார்-கெருடாவில்

பிரதேச சபைத் தேர்தல் வெற்றி என் பது கட்சிக்கானதோ சின்னத்துக்கானதோ இல்லை.

மாறாக அது அந்த ஊரின் சேவையாளராக இருந்தால் மாத்திரமே போதுமானது.

ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் போட்டியிடுபவர் அனேகம். அந்த ஊரில் உள்ளவர்களுக்கு சொந்தமாகவோ அல்லது நன்கறிந்தவராகவோ இருக்கும்.

இங்கு கட்சிக்கோ சின்னத்துக்கோ வேலை இல்லை என்பது தான் உண்மை.

**இந்த விசுவாவசு வருடத்தில் எல்லாமே நல்லபடியாக அமையுமா வியாசரே?**

மகாலட்சுமி-கொக்குவில்

வடிவேல் ஒரு படத்தில் கூறுவார். அடேய் உன்னிடம் ஸ்ராட்டிங் நல்லா இருக்கு. ஆனால் பினிசிங் படுமோசமாக இருக்குது என்று.

இந்த வருடமும் கைவிசேடம், புத்தாடை, பலகாரம், கொண்டாட்டம் என்று ஜோராகத் தொடங்கி இருக்கிறது. இறுதியில் திண்டாட்டத்தில் முடியாமல் விட்டால் சரி.

**தையிட்டி விகாரை பிரச்சினைக்குப் போராடுபவர்கள் ஏன் நீதிமன்றம் செல்லவில்லை.**

சுதன்-குப்பிளான்

உங்களுக்கு புரிந்த இந்த மகா தத் துவம் ஏன் வருடக் கணக்காக போர்க்கொடி தூக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு புரிய வில்லை.

இதை சட்டரீதியாக அணுகவேண்டியது மிக முக்கியமான விடயம். இல்லையேல் அது இன-மத வன்மத்தை உண்டாக்குவதாக அமைந்து விடும்.

இந்த விடயத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லாதது ஏன் என்ற கேள்வியைக் கேட்கும் போது தான்; ஓ... ஆர்ப்பாட்டக்காரர் பிரச்சினைக்குத் தீர்வை எதிர்பார்க்கவில்லை.

இன்னும் இன்னும் பிரச்சினையையே எதிர்பார்க்கின்றனரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**இந்த வருடத்தில் தமிழருக்கு விமோசனம் உண்டா?**

குமார்-யாழ்ப்பாணம்

இந்த வருடம் அல்ல வேறு எந்த வருடத்திலும் தமிழினத்துக்கு விமோசனம் கிடைக்கப்போவது இல்லை.

ஏனென்றால் அவ்வளவுக்கு எமது அரசியல் தலைவர்கள் அநியாயம் செய்து விட்டனர்.

அந்த அநியாயங்களுக்கெல்லாம் பாவ த்தை அனுபவிக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களாகிய நாம் தானே.

சிங்கள இனம் ஏன் இவ்வளவு சிறப்பாக இருக்கிறது என்று எப்போதாவது சிந்தித்திருக்கின்றீர்களா? அவர்கள் இருக் கும் இடமும் செழிப்பாக இருப்பதை உணர்ந்திருக்கின்றீர்களா? எல்லாம் கடவுள் அளந்த அளவே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குயில் கூவுதே!



குயில் கூவுதே! குயில் கூவுதே!
அதிகாலையில் குயில் கூவுதே!
வெயில் ஏறியும் குயில் கூவுதே!
வேடிக்கை பாரேன் குயில் கூவுதே!

மரத்து மரம் கிளையில் அமர்ந்து
குயில் கூவுது பாரேன் குழந்தையே!
உரத்த குரலால் உலகத்தை எழுப்பி
உள்ளத்தை கிள்ளுதே நீ பாரேன்!

குயில் கூவுதே! குயில் கூவுதே!
அதிகாலையில் குயில் கூவுதே!
உன்னை அழைத்து உறவு கொண்டாட
குயில் கூவுது! குழந்தையே!
எழுந்து விழுந்து நடந்து
பயில் என் சின்னக் குழந்தையே!

**ஆறுமுகம் சிவபாதம் - இணுவில்**

# ரசனையின் அர்த்தம்



குழந்தையொன்றின்
ஆசை முத்தம்
அப்பட்டமாய் தெரிந்தது
அவன் கன்னக்குழியில்...

யாரோ அதை பார்த்துவிட்டு
ஏதோ ஒன்றை பேசுவது
என் காதுகளில் கேட்கின்றது.

தூரத்து நிலவே
தொட்டுப் பார்க்காமல்
உன்னை ரசித்து எழுதும்
கவிதைகளில் எல்லாம்
ஒரு தூய்மை இருகின்றது என்றால்
இவர்கள்
நம்பவா போகிறார்கள் ...?

**சீனுஜா. சிறி**
**காக்கைதீவு, ஆனைக்கோட்டை**
**யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

# பூமியில் நான் வளர புத்துயிர் கொடுத்தவளே



கருவறைத் துன்பங்களை
எல்லாம் - எனக்காக
கனிவோடு பொறுத்தவளே

பிறக்கும் போது நான் கொடுத்த
வலியைக் கூட - என்
ஸ்பரிசம் பார்த்து மறந்தவளே

தத்தித் தத்தி நான் ஒருவாறு
அம்மா என்கையில்
தாளம் போட்டு மகிழ்ந்தவளே

அடி எடுத்து நான் நடந்தபோது
அச்சா சலங்கை மாட்டி
அழகு பார்த்தவளே



இவள் தான் காணாத
மகிழ்ச்சியெல்லாம்
ஈன்றவள் நான் காண
பாடு பட்டவளே

வலிகள் வந்து சுருண்ட போது
வார்த்தைகளால் தேற்றியவளே

கண்ணம்மா...
பெற்றெடுத்தது நீ என்கையில்
பார் கூட மகிழ்கின்றது

பட்டு மேனியில் பாசமாய் தழுவி
பத்து மாதம் சுமந்தாயே

பிரியத்துடன் நெஞ்சில் சுமப்பேன்
பிரியாது என் உயிர் இருக்கும் வரை

**அருண்சியா.ஜூ (கேணி கவிஞரு)**
**வெற்றிலைக்கேணி**

# கவிதைக் கலசம்

# இயற்கையை வாழவிடு



நீயா நானா என்று
போட்டி போடுவதும்
நான்தான் பெரிது என்று
தூக்கலாய் காட்டுவதும்
வரட்டுத் தனமான
தனி மனிதர்கள் மட்டுமல்ல.

அறிவியலில் நாங்களும்
அசத்தலானவர்கள் என்று
பெரிய பெரிய நாடுகளும்
அதைத்தான் செய்கின்றன.

வித விதமாய் அணுக்களால்
குண்டுகளை தயாரித்து
வெடிக்க வைத்துமிரட்டி வெறும்
பரிசோதனை என்கிறார்.

பூகம்பம் புயல் சுனாமி
கடும்வெப்பம் பனிப்பொழிவு
இயற்கையின் சீற்றமாம்
புவியில் பேரழிவு என்பார்.

பதுக்கி பதுக்கி வைத்திருக்கும்
அணுகுண்டுகளை நினைத்து
மனிதர்கள் விலங்குகள் மட்டுமல்ல
பூமியும் பதறித்தான் கிடக்கிறது.

அறுவைச் சிகிச்சையில் தாம்
அசத்துகிறோம் என்றுரைப்பர்.
ஆய்வு கூடங்களில் தாமே
ஆக்கபூர்வ வல்லவராம்.

புவியைக் குடைந்து போய்
மிகவும் நீளமாக ஆழமாக
இயல்புகளை கெடுக்கின்றார்.
இயற்கையின் சீரமைவை
இயன்றவரை நறுக்கி
அகழ்வதிலும் ஒரு பெருமை.

பூமி இன்னும் தன்னை
கட்டமைத்து முடிக்கவில்லை
புவி ஆற்றலை சிதைக்காமல்
சிந்திப்போம் சிறப்பாக.

**வயவை ஆனந்தன்**

# பொக்கிஷக் கவிதை

# தேசத்தை வீடாக எண்ண வேண்டும்

**15.06.1967ஆம் ஆண்டு மல்லிகை இதழில் வெளியான கவிதை**



தேனாறு பாலாறு பாயும் செல்வச்
சிறப்புள்ள நாடாக ஈழம் தன்னை
ஏனாக்க முடியாது இங்கே யுள்ள
எவராலும் ஆகாது என்ற வெண்ணம்
போனாலே போதும்பின் புதிய வாழ்வு
பொலியாதோ பொருளெல்லாம் புசிப்ப தற்கே
தானாகக் கிடையாதோ தரித்தி ரந்தான்
சற்றேனும் இல்லாமல் ஓடி டாதோ.

கல்லூரி வாசல்தனை மிதித்த பின்னர்
காற்சட்டை போட்ட தொழி லன்றி வேறு
நல்லதொழி லெதுவாக இருந்த போதும்
நாடாத வாலிபரால் நமது நாடு
அல்லலுறு கின்றதென மேடை தோறும்
அழுவோரும் அறிக்கைபல விடுகின் றோரும்
சொல்வதன்றிச் செயலேதும் புரிவ தில்லை
சுரண்டுகிற எண்ணத்தை விடுவ தில்லை

எங்குசென்று பார்த்தாலும் லஞ்சம்: இஃதை
எடுப்போரும் கொடுப்போரும் இல்லை யானால்
பங்கமிலா திங்குள்ள கரும மெல்லாம்
படிப்படியாய் நிறைவேறும்: பண்பு மோங்கும்
தங்கள் தங்கள் காரியத்தைத் தாமே சென்று
தடையின்றிச் செய்துவர முடியும் ஆனால்
இங்குள்ளோர் உளமின்னும் மாற வில்லை
உலுப்புகிற சிக்கலொன்று மோயவில்லை

காளையரும் கன்னியரும் கழனி தோறும்
கன்னலொடு செந்நெலினை விளைக்க வேண்டும்
பாளைநிறை தெங்கோடு நுங்கு பாக்குப்
பார்த்தவிட மெங்குமழ கூட்ட வேண்டும்
ஆளையேய்த்துப் பிழைப்போர்கள் மாய வேண்டும்
ஆலைகளும் சாலைகளும் ஓங்க வேண்டும்
வேளைதவறாது தொழி லாற்ற வேண்டும்
வெறும்பேச்சு வீரரிலா தொழிய வேண்டும்.

உழைத்துண்ண வேண்டுமெனும் எண்ணம் இங்கே
யுருவாகா திருக்கின்ற வரைக்கும்: மக்கள்
பிழைக்கின்றார் என்றிட்டால் அதிற்பா திப்பேர்
பிறராலே வாழ்கின்றா ரென்ப தாகும்
இளைக்கின்ற தேகத்தோ டெலும் பாய்ப் போகும்
ஏழைநிலை யுயர்வாக வேண்டு மானால்
திளைக்கின்ற செல்வத்தில் இருப்போ ரெல்லாம்
தேசத்தை வீடாக எண்ண வேண்டும்.

**காரை.செ.சுந்தரப்பிள்ளை**


# அன்பு வாசகர்களே!



**உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...**

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி – சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயிர்கள் வாழும் புதிய கிரகம் கண்டுபிடிப்பு...



ஏலியன்கள் இனியும் சயின்ஸ் ஃபிக்ஷன் படங்களில் வரும் பூதங்கள் அல்ல. பூமியிலிருந்து தொலை தூரத்தில் உள்ள ஒரு நட்சத்திரத்தைச் சுற்றிவரும் கிரகத்தில் உயிர்கள் இருக்கலாம் என்பதற்கான வலுவான ஆதாரங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஏலியன்கள் இருக்கிறதா, இல்லையா என்ற கேள்விக்கு, **"இருக்கிறது அல்லது இருக்கலாம்"** என நாம் பதில் சொல்ல முக்கிய காரணம், இந்தப் பிரபஞ்சத்தின் பிரமாண்டம்தான்.

அதுதான் நம்மை இன்னும் இன்னும் ஆழமாக விண்வெளியில் தேடிப்பார்க்க வைக்கிறது. அப்படிக் கண்டறியப்பட்ட கிரகம்தான் **K2-18b.**

இந்த கிரகம் பூமியிலிருந்து 124 ஒளியாண்டுகள் தூரத்தில் சிம்ம நட்சத்திரக் கூட்டத்தில் உள்ளது.

இந்தக் கிரகத்தில் உள்ள சில மூலக்கூறுகள் பூமியில் இருக்கக் கூடியவை. அதுவும் எளிமையான உயிரினங்களால் மட்டுமே உருவாக்க முடியும் வேதியல் சேர்மங்கள்.

இந்த கிரகத்தின் வளிமண்டலத்தில் மீத்தேன் மற்றும் கார்பன் டை ஒக்சைடு தலா 1 விழுக்காடு இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். ஆரம்பத்தில் நீராவி இருந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் பின்னர் **0.1%**இற்கும் குறைவாகவே உள்ளதாகக் கூறுகின்றனர்.

இவை தவிர டைமெத்தில் சல்பைடு **(DMS)** மற்றும் டைமெத்தில் டைசல்பைடு **(DMDS)** ஆகிய வேதிப் பொருட்கள் உள்ளன. இவைதான் உயிர்கள் இருப்பதற்கான சாட்சியமாகப் பார்க்கப்படுகிறது.

நாம் படத்தில் காண்பது போன்ற, அறிவாற்றல் மிக்க ஏலியன்கள் இருப்பதாகக் கூற முடியாது. ஆனால் நிச்சயமாக அங்கே உயிர்கள் இருக்கின்றன என அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

இந்தக் கிரகத்தை நாசாவின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி மூலம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்தக் கிரகத்தில் வெப்பமான, உயிர்கள் நிறைந்த கடல் இருப்பதாக இந்தத் திட்டத்தை வழிநடத்திய முனைவர் நிக்கு மதுசுதன் தெரிவித்துள்ளார்.

உயிர் வாழ ஓரளவு தகுதியான கிரகங்கள் கண்டறியப்பட்டிருந்தாலும், உயிர்கள் வாழ்ந்துகொண்டிருப்பதற்கான அடையாளங்களை ஒரு கிரகத்தில் கண்டறிவது இதுவே முதன்முறை.



# ஆச்சி அறிவுரை விவசாயம் காப்போம்



○ மாவை.நா.கஜேந்திரன்

## பேராண்டி...

எப்போதாவது நாங்கள் சாப்பிடுற சாப்பாட்டை உற்பத்தி செய்யிற விவசாயிகள் பற்றியும் அவர்கள் படுற கஷ்டம் பற்றியும் நீ சிந்தித்திருக்கிறியோ?

படிக்கிற சின்னப்பிள்ளைகளிட்ட, படிச்சு என்னவாகப் போறியள் எண்டு கேட்டால், நான் டொக்டர் ஆகப்போகிறன். எஞ்சினியர் ஆகப்போகிறன் எண்டு சொல்லுங்களே தவிர, உலகத்துக்கே சோறு போடுற விவசாயியா வரப்போறன் எண்டு எந்தப் பிள்ளைகளும் சொல்லுறது இல்லை.

ஏனெண்டால் எல்லாப் பெற்றோரும் தங்கட பிள்ளை டொக்டர், எஞ்சினியர் ஆகவேணும் எண்டு கனவு காணுகினம், அந்தக் கனவை தங்கட பிள்ளைகளின்ர வாழ்க்கையிலை திணிக்கினம்.

அதாலை விவசாயம் செய்யிறது கௌரவமில்லாத தொழில் எண்டாகி விட்டுது.

உழுது பண்படுத்தி, விதை விதைச்சு, நீர் இறைச்சு, களை எடுத்து, பயிர்களைக் காபந்து பண்ணி அறுவடை செய்து சந்தைக்குக் கொண்டு போனால், அங்க விளைபொருட்களை அறாவிலைக்கு கேட்கிற கலாசாரம் இருக்குது.

அதோட பத்துக் கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு எண்டுற கொடுமைகளை கேக்கிறதுக்கு ஆள் இல்லாத நிலையால விவசாயிகள்தான் பாதிக்கப்படுகினம்.

கஷ்டப்படுற விவசாயிக்கு எந்த இலாபமும் இல்லை. ஆனால் இடைத் தரகர்கள் நோகாமல் நொங்கு குடிக்கினம் எண்டு நினைக்க நெஞ்சம் பதை பதைக்குது பேராண்டி.

இதுகளைத் தட்டிக் கேக்கிறதுக்கு அரசாங்கமும் முன்வரவேயில்லை, அரச அதிகாரிகளும் விரும்பேல்லை. விவசாயம் செய்யிறது எண்டுறது ஒரு பிள்ளையைப் பெத்து வளர்க்கிற மாதிரி.

அவ்வளவு பத்திரமாப் பார்த்துக்கொள்ளவேணும். காலையிலை தோட்டத்துக்கு போனால் இரவு ஏழு, எட்டு மணியாகிடும் வீட்டை போக.

இவ்வளவு கஷ்டப்பட்டு அதுக்கு பலன் கிடைக்காட்டி விவசாயத்திலை ஈடுபட மனம் வருமோ?

பேராண்டி! நீ வீட்டுத்தோட்டம் செய்யிறாய் எண்டு கொம்மா சொன்னவள். நேற்று வீட்டிலை சமைச்ச பயற்றங்காய், கத்தரிக்காய் எல்லாம் உன்ர தோட்டத்திலை விளைஞ்சது எண்டு கேட்க மனம் சந்தோசப்பட்டுது. ஒவ்வொரு வீட்டிலையும் வீட்டுத்தோட்டம் கட்டாயம் இருக்கவேணும்.

அது வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யிறதோட மனதுக்கு சந்தோசத்தைத் தரக்கூடிய பொழுதுபோக்கு.

இவை எல்லாத்தையும்விட விவசாயிகளையும், விவசாயத்தையும் புரிஞ்சுகொள்ளுற மனநிலையும் உருவாகும்.

பேராண்டி! விவசாயம் செய்யிறது கௌரவமில்லை எண்டு சொல்லுறவைக்கு நாக்கைப் பிடுங்கிற மாதிரி நாலு வார்த்தை கேள். பாட்டிதான் இப்படிக் கேட்கச் சொன்னவ எண்டு சொல்லு. பிறகு வாறதை நான் பார்த்துக் கொள்ளுறன்.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசைவத்தில் மட்டுமல்ல சைவத்திலும் இருக்கு சத்துக்கள்...



அசைவ உணவுகளில் தான் உடலுக்கு ஊட்டம் தரும் பல்வேறு சத்துகள் நிறைந்துள்ளன. அசைவ உணவுகளை ஒப்பிடும்போது சைவ உணவுகளில் சத்துகள் குறைவாகக் காணப்படுகின்றன என்கிற வாதம் பொதுவாக உண்டு. அசைவத்துக்கு இணையான சத்துகளைப் பெறுவதற்கு என்னென்ன சைவ உணவுகளை எடுத்துக் கொள்ளலாம்.

அசைவ உணவுக்கு இணையான சைவ உணவுகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, பார்ப்பதற்கு அசைவம் போலவே தோற்றமளிக்கும் சைவ உணவுகள். மற்றொன்று அசைவ உணவுகளில் காணப்படும் சத்துகளுக்கு இணையான சத்துகள் கொண்ட சைவ உணவுகள் அசைவ தோற்றத்தில் சைவம்!

கோதுமையின் குளுட்டனிலிருந்து தயாரிக்கப்படும் புரதம் நிறைந்த உணவு "சைட்டன்" (Seitan). இது இறைச்சிக்கு மாற்றாக சமையலில் பயன்படுத்தப்படுகிறது. பார்ப்பதற்கு மட்டன் போன்று தோற்றமளிக்கும். அதேபோல நொதிக்கவைத்த சோயா பீன்ஸில் இருந்து பால் எடுத்துத் தயாரிக்கப்படும் உணவு "டெம்பே" (Tempeh). இதுவும் பார்ப்பதற்கு இறைச்சியைப் போலவே இருக்கும். "எக் பிளான்ட்" என்று சொல்லப்படும் கத்திரிக்காய் வகை, காளான், பலாக்காய் ஆகியவற்றையும் சமைத்தால் பார்ப்பதற்கு அசைவ உணவுகள் போன்றே தோற்றமளிக்கும்.

வாழைக்காயைக்கூட மீன் வறுவல் போன்று சமைத்துச் சாப்பிடுகின்றனர். ஆனால், அசைவ உணவுகளில் அதிகமாகக் காணப்படும் புரதச்சத்து இந்த உணவுகளில் சற்றுக் குறைவாகவே காணப்படும்

அசைவ உணவுகளில் புரதச்சத்து, விற்றமின் பி12, பி6 உள்ளிட்ட சத்துகள் முக்கியமாக காணப்படும். இதுவே சைவ உணவுகளான பசலைக்கீரை, ஸுகினி, காலி ஃபிளவர், புரொக்கோலி போன்றவற்றில் கல்சியம், பி12 உள்ளிட்ட சத்துகள் நிறைந்து காணப்படும். தினசரி சமையலில் பயன்படுத்தும் பருப்பு வகைகளில் புரதச்சத்து அதிகம்.

நட்ஸ் மற்றும் விதைகளில் நல்ல கொழுப்பு அதிகம் காணப்படும். நட்ஸ் மற்றும் விதைகளை ஸ்நாக்ஸ் போன்று சாப்பிடலாம் அல்லது தேங்காய்க்கு பதில் முந்திரிப்பருப்பை அரைத்து சமையலில் சேர்த்துக்கொள்ளலாம். புரதச்சத்து அதிகம் காணப்படும் சப்ஜா விதைகளை வெறும் தண்ணீரில் ஊற வைத்துச் சாப்பிடலாம். எடைக் குறைப்புக்கு உதவும். வயிறு நிறைந்த உணர்வையும் கொடுக்கும். நீண்ட நேரத்துக்குப் பசி எடுக்காது.

சைவ உணவுகளை மட்டுமே சாப்பிடுகிறவர்களுக்கு அசைவத்திலிருந்து கிடைப்பது போன்ற சத்துகள் கிடைக்காது என்ற வாதம் உள்ளது. அசைவ உணவுகளில் புரதச்சத்து அதிகம். ஆனால் உடலுக்கு மிகவும் தேவையான நார்ச்சத்து அசைவ உணவுகளில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. சைவ உணவுகளில் உடலின் ஊட்டத்துக்குத் தேவையான பல்வேறு சத்துகள் உள்ளன.

பன்னீர், சோயாவிலிருந்து கிடைக்கும் டோஃபு ஆகியவற்றையும் புரதச்சத்துக்காக எடுத்துக் கொள்ளலாம். பழங்களில் பொதுவாக சரிவிகித அளவில் சத்துகள் காணப்படும் என்பதால் அந்தந்த சீசனில் விளையும் பழங்களை எடுத்துக்கொள்ளலாம்.

**"எப்படி எடுத்துக்கொள்வது?"** அசைவத்துக்கு மாற்றாக சைவ உணவுகளை எடுக்கும் போது அவற்றின் அளவை அதிகரிக்க வேண்டும். அசைவ உணவுகளை 100 கிராம் சாப்பிட்டால் இந்த மாற்று உணவுகளை கால் கிலோ அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரே வேளையாக எடுத்துக்கொள்ளாமல் நான்கைந்து வேளையாகப் பிரித்து எடுத்துக் கொள்ளலாம்.

# கடவுள் எவ்வளவு பெரியவர்?



"மகன் கேட்டான் அப்பா கடவுள் எவ்வளவு பெரியவர் அப்பா?"

அப்பா வானத்தைப் பார்த்தார். உயரத்தில் ஒரு விமானம் பறந்து கொண்டிருந்தது. அதோ மேலே பறக்கிறதே அந்த விமானம் அது எவ்வளவு பெரியது என்று உன்னால் சொல்லமுடியுமா?

அது சிறிதாகத்தான் தெரிகிறது அப்பா. கஷ்டப் பட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது அது எனக்குத் தெரியவில்லை அப்பா.

அப்பா, மகனை அழைத்துக்கொண்டு விமான நிலையத்துக்குப் போனார். வரிசையாக நான்கு விமானங்கள் நின்றுகொண்டிருந்தன. முதலில் நின்று கொண்டிருந்த விமானத்தைக் காட்டினார் அப்பா. அந்த விமானம் பார்ப்பதற்கு எப்பிடியிருக்கு?

மகன். கைகளை அகலமாக விரித்துக் காட்டிச் சொன்னான் மிகவும் பெரிதாக இருக்கிறது அப்பா.

அது மாதிரிதான் கடவுளும். நாம் விலகி நிற்க நிற்க, சிறிதாகத்தான் தெரிவார் சிலவேளைகளில் தெரியக்கூட மாட்டார். அவரை நெருங்க நெருங்க முழுமையாக அவரைப் பார்த்துவிடலாம். **அவ்வளவு பெரியவர் கடவுள்.**

# ஐ.பி.எல் இல் புதிய ரோபோ நாய்



ஐ.பி.எல் இன் ஒளிபரப்புப் பிரிவில் புதிய சேர்க்கையாக நான்கு கால் கொண்ட ரோபோவை அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்த உயிரற்ற சக ஊழியரை சமூக வலைத்தளங்களில் வீடியோ வெளியிட்டு வரவேற்றுள்ளது **IPL** நிர்வாகம்.

அந்த வீடியோவில் முன்னாள் நியூசிலாந்து வீரரும், புகழ்பெற்ற வர்ணனையாளருமான டேனி மோரிசன், இந்த ரோபோ நாயை அறிமுகப்படுத்தினார்.

**"இதனால் பேச முடியும், ஓட முடியும், நடக்க முடியும், குதிக்க முடியும் முக்கியமாக இதயத்தில் இருந்து புன்னகையை வரவழைக்க முடியும்."** எனக் கூறியுள்ளனர். இது முற்றிலும் புதிய பார்வையில் ஐ.பி.எல் போட்டிகளை வழங்கும். வீடியோவில் மோரிசனின் குரல் கட்டளைகளுக்கு இந்த ரோபோ செவிமடுத்தது. இதில் கண்காணிப்பு மற்றும் ஒளிபரப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.



## சமைப்போம் சுவைப்போம்

### நெல்லிப் பழச்சாறு

**தேவையானவை :**

1. நெல்லிக்காய் – 4
2. கறிவேப்பிலை – ஒரு கொத்து
3. புதினா – ஒரு கொத்து
4. கொத்தமல்லித்தழை – சிறிதளவு
5. தேன் – 2 டீஸ்பூன்

**செய்முறை**

நெல்லிக்காயின் கொட்டையை நீக்கிவிட்டு கறிவேப்பிலை, புதினா, கொத்தமல்லியுடன் சேர்த்து சிறிதளவு நீர்விட்டு அரைத்துக்கொள்ளவும். தேவையான அளவு நீர் சேர்த்து வடிகட்டிக்கொள்ளவும். அத்துடன் தேன் சேர்த்துப் பரிமாறவும்.



**இந்த நெல்லிப் பழச்சாறு உடனடி புத்துணர்ச்சி அளிப்பதுடன் இரத்தச்சோகையையும் சரிசெய்கிறது. கூந்தல் வளர்ச்சிக்கு தேவையான சத்துகள் நெல்லிக்காய்களில் நிறைந்துள்ளன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கிய சமூக இதழ் "கலைமுகம்" வெளியாகியது...




மதம், மொழி கடந்து கலைவழியில் இறைபணி ஆற்றிவரும் திருமறைக் கலாமன்றம் 1965ஆம் ஆண்டில் கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகளாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டு 60ஆவது ஆண்டில் காலடி பதித்து உலகெங்கும் வியாபித்து நிற்கிறது.

இந்நிலையில் திருமறைக் கலாமன்றத்தின் கலை, இலக்கிய சமூக இதழான "கலைமுகம் வெளியாகியிருக்கிறது."

ஜனவரி – மார்ச் (2025) மாத இதழான "கலைமுகம்" 79ஆவது இதழ் பல்வேறு சிறப்பம்சங்களுடன் வெளிவந்து விட்டது.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புக் கவிதை, மொழிபெயர்ப்பு சிறுகதை, நூல் மதிப்பீடுகள் என்பவற்றைத் தாங்கி வெளிவந்துள்ளது.

உடல் அசைவியக்க அரங்கிற்கு புத்துயிர் கொடுத்த தோமாஸ் வெஸ்கியின் உடல் மொழி அரங்கியல் கட்டுரை மிகவும் சிறப்பு வாய்ந்த நடன, நாடக அம்சங்களைக் கொண்டு ஒரு வலுவான அரங்கை உருவாக்குவது எவ்வாறு என்பதை இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ளலாம். நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

அத்துடன் "எண்பதுகள்" எனும் சிறுகதையில் வரும் "நெய்த்தோசையும் இடிச்ச சம்பலும்" கிராமத்து மண் வாசனைக்கே எம்மை இழுத்துச் சென்றுவிட்டது. அந்தக் காலத்து மூக்குப் பேணிகளை இந்தக் காலத்துப் பிள்ளைகள் தான் அறியுமா? 80களில் தமிழர்களின் மனம் பீதியையும் அங்கலாய்ப்புக்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

கிராமத்து மண் மணக்கும் "நாட்டுப்புற வாழ்க்கை", கசப்பின் அழகு "அது அப்படித்தான்" எனும் கவிதைகள் சிறப்பாக உள்ளன.

இன்னும் யோண்சன் ராஜ்குமார் எழுதிய "வரலாற்றில் திருமறைக் கலாமன்றம்..." என்னும் தொடர் மிகவும் சிறப்பானது. திருமறைக் கலாமன்றத்தின் பாரிய படைப்பான திருப்பாடுகளின் காட்சியின் வளர்ச்சி பற்றிய தொகுப்பு அது. மிகவும் சிறப்பு.

**ஒட்டுமொத்தத்தில் "கலைமுகம்" கலை இலக்கியத் தேடலில் ஊற்று என்றால் மிகையாகாது.**

யோ.மேரி நிஷாந்தினி

# பஞ்சாப் கிங்ஸ் நம்பிக்கை ஒளியூட்டும் ஸ்ரேயாஸ்



பஞ்சாப் கிங்ஸ் லெவன் ஒரு திகிலான ஐ.பி.எல் அணி. இதுவரையிலான 18 சீசன்களைக் கடந்திருக்கும் அந்த அணி விரல்களில் கொள்ளாத அளவுக்கு கப்டன்களையும் பயிற்சியாளர்களையும் மாற்றியிருக்கிறது. ஸ்ரேயாஸ், அந்த அணியின் 17ஆவது கப்டன். ரிக்கி பாண்டிங் எத்தனையாவது பயிற்சியாளர் என்பதை இணையத்தாலேயே சொல்லமுடியவில்லை. அந்தளவுக்கு சிக்கி திக்கிக் கிடக்கிறது அந்த அணி.

சீட்டுக்கட்டைக் கலைத்துப் போடுவதைப் போல ஒவ்வோர் ஆண்டும் அணியைக் கலைத்துப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட அணியை, புதிய உச்சத்துக்கு புதிய கப்டன் ஸ்ரேயாஸ் எடுத்துச் செல்லக்கூடும் என்கிற நம்பிக்கை ஒளி தெரிகிறது. ஆம், முதல் இரண்டு போட்டிகளிலேயே அவ்வளவு நற்குணாங்களையும் தலைமைப் பண்பையும் அழகாக வெளிக்காட்டியிருக்கிறார், ஸ்ரேயாஸ்.

குறிப்பாக, ஐ.பி.எல் டெல்லி அணியை, ப்ளே ஆப்ஸ் வரை அழைத்து வந்தார். கொல்கத்தா அணியை சாம்பியனே ஆக்கினார். அப்படியிருந்து தான் விரும்பிய சில விடயங்கள் கொல்கத்தா அணியில் கிடைக்காததால், அங்கிருந்து வெளியேறினார். வழக்கம்போல இந்த சீசனுக்கு சீட்டைக் கலைத்துப் போட்டு ஆடக் காத்திருந்த பஞ்சாப் அணி, ஸ்ரேயாஸை பெரும்தொகைக்கு அள்ளி கப்டன் ஆக்கிவிட்டது.

18 ஆண்டுக்கால வரலாற்றில் பஞ்சாப் அணி ஒரே ஒரு முறைதான் ப்ளே ஆப்ஸ்'க்கே தகுதி பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட அணியை, வழிநடத்துவது எளிதான விடயம் அல்ல. ஆனால், ஆரம்பத்திலேயே தான் ஒரு நல்ல கப்டன் என்பதை வெளிக்காட்ட ஆரம்பித்து விட்டார் ஸ்ரேயாஸ்.

குஜராத்துக்கு எதிரான முதல் போட்டியில் அணிக்காக தன்னுடைய சதத்தையே தியாகம் செய்தார். **"என்னுடைய சதத்தைப் பற்றி யோசிக்காமல், பந்தைப் பார்த்து உன்னுடைய ஆட்டத்தை ஆடு"** என ஸ்ரேயாஸ்தான் கடைசி ஓவருக்கு முன்பாக சஷாங்கிடம் சொல்லியி ருக்கிறார்.

"யாராக இருந்தாலும் அணிதான் முக்கியம். தனிப்பட்ட எந்த வீரரின் நலனும் எப்போதுமே முக்கியம் இல்லை" என்பதை பெவிலியனில் உள்ள தன்னுடைய வீரர்களுக்குச் செயல்வழியாகச் சொல்லியிருக்கிறது, ஸ்ரேயாஸின் இந்தப் பண்பு.

பஞ்சாப், எப்போதுமே துண்டுதுண்டாக நின்று தனித்தனியாக ஆடும் அணி. அவர்களிடம் கூட்டுச் செயற்பாடே இருக்காது. தன்னுடைய சதத்தை விட்டுக்கொடுத்ததன் வழி, அந்தப் பாரம்பர்ய பழக்கத்தையே மாற்றியிருக்கிறார், ஸ்ரேயாஸ்.

அணிக்காக அணியின் மற்ற வீரர்கள் மீது அவர் காட்டும் நம்பிக்கைதான் அவருடைய கப்டன்சியின் சிறப்பம்சம். அந்த கப்டன்சியின் பலனாக இந்த சீசனில் பஞ்சாப் அணி புதிய உச்சத்தை எட்டும் என்பதுதான் பலருடைய கணிப்பும்.

**நல்ல தலைமை வெல்லட்டும்!**

# தெளிவே என் சிந்தனையுள்...

6

பக்குவப்படுதல் என்பது சில நிகழ்வுகளினூடாகவும் நடந்துவிடும். அவ்வாறு என்னைப் பக்குவப்படுத்திய ஒரு நிகழ்வை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அது 2006-2007 காலப்பகுதி நான் விடலைப் பருவ இளைஞன். அன்றைய காலம் போர் நிறைந்த, மிகவும் பயங்கரமான சூழல் நிலவிய காலம்.

மாலை 6.30 மணிக்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு விடும். யாரும் வெளியே வரமுடியாது. அவசர தேவையெனின் லாந்தர் விளக்குடன் வரலாம்.

அதற்கும் விளக்கம், விசாரணை, கைது, அடி - உதை என்பன இருக்கவே செய்யும்.

நான் எனது நண்பர்களுடன் மாலை கிரிக்கெட் விளையாடிவிட்டு வீடு செல்லத் தயாராகிவிட்டேன். திடீரென ஒரு பந்தையம் வைத்தான் நண்பன் ஒருவன்.

அப்போது நேரம் மாலை 7 மணி, அதோ அந்தச் சுடலையில் போய் அங்குள்ள கரித் துண்டை எடுத்து சுவரில் பெயரையும் திகதியையும் யாரால் எழுத முடியும் என்றான் அவன்.

அது எமது துணிச்சலுக்கு வைக்கப்பட்ட பரீட்சை என்பதால், நானும் இரு நண்பர்களும் அந்த விசப்பரீட்சைக்குத் தயாராகினோம்.

சுடலைக்குச் சென்றாகியது. கரித் துண்டை எடுத்து பெயர், திகதி எழுதி முடித்த கணத்தில் பீல்ட் பைக் ஆமி வருவதைத் தெரிந்துகொண்டோம்.

இரவு 7.30 மணி, ஆள் அரவமற்ற மயானத்தில் மூன்று இளைஞர்களை ஆமி பார்த்தால், சூடு நிச்சயம்.

எமக்கருகில் ஒரு சிறு ஈச்சம் புதர். இரு நண்பர்களையும் இழுத்துக் கொண்டு ஈச்சம் புதருக்குள் மறைந்து கொண்டேன்.

பனி இரவு, நிசப்தப் பொழுது மயான அமைதியைப் பீல்ட் பைக்குளின் இரைச்சல் குதறி எடுத்தது.

ஐந்து மோட்டார் சைக்கிள்கள் எம்மைக் கடந்து விட்டன. ஒரு மோட்டார் சைக்கிள் எமக்கு சற்றுத் தொலைவில் நின்று கொண்டது. மோட்டார் சைக்கிளின் மின் வெளிச்சம் அந்தச் சிறு புதரை சல்லடை போடுவதாய் தென்பட்டது.

நான் கடவுளை மன்றாடத் தொடங்கினேன். கடவுளே இந்த இக்கட்டில் இருந்து காப்பாற்றும். நான் உனக்கு பாற்குடம் எடுக்கிறேன் என நேர்த்தி வைத்தேன். மோட்டார் சைக்கிள் நகரவில்லை.

கடவுளே எம்மைக் காப்பாற்று. நான் உனக்கு காவடி எடுக்கிறேன் என மன்றாடினேன். மோட்டார் சைக்கிள் நகர்வதாய் இல்லை. இரு நண்பர்களும் அழும் சத்தம் என் காதுகளில் வீழ்ந்தது.

இறைவா! என் வாழ்நாளில் உன்னை மறக்க மாட்டேன். என் உடல் - உயிர் மொத்தமும் உனக்கே என்று என்னை ஒட்டுமொத்தமாய் இறைவனிடம் அர்ப்பணித்தேன்.

அந்த மோட்டார் சைக்கிள் புகையையும், புழுதியையும் பீச்சியடித்தபடி எம்மைக் கடந்து சென்றது.

அன்பானவர்களே! அன்று நான் பக்குவப்பட்டுக்கொண்டேன்.

அது வரை இறை சிந்தனையின்றித் திரிந்த என்னுள் இறைவன் ஒளியாய்த் தெரிந்தான். அந்த ஒளி இன்று வரை பிரகாசித்துக் கொண்டேயிருக்கிறது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: குடியிருந்த கோயில்
இசை: எம்.எஸ்.வி
பாடியவர்: டி.எம்.எஸ்



என்னை தெரியுமா என்னை தெரியுமா –
நான் சிரித்து பழகி கருத்தை கவரும் ரசிகன்
என்னை தெரியுமா ஆஆஆ ....
உங்கள் கவலை மறக்க கவிதை பாடும்
கவிஞன் என்னை தெரியுமா ஆஆ....
என்னை தெரியுமா –
நான் சிரித்து பழகி கருத்தை கவரும் ரசிகன்
என்னை தெரியுமா
உங்கள் கவலை மறக்க கவிதை பாடும்
கவிஞன் என்னை தெரியுமா
ஆஹா ரசிகன் ஆஹா ரசிகன்
நல்ல ரசிகன் நல்ல ரசிகன்
உங்கள் ரசிகன் உங்கள் ரசிகன்

நான் புதுமையானவன் உலகை புரிந்து கொண்டவன்
நல்ல அழகை தெரிந்து மனதை கொடுத்து அன்பில் வாழ்பவன்
ஆடலாம் பாடலாம் அனைவரும் கூடலாம்
வாழ்வை சோலை ஆக்கலாம்
இந்த காலம் உதவி செய்ய –
இங்கு யாரும் உறவு கொள்ள
அந்த உறவு கொண்டு மனித இனத்தை அளந்து பார்க்கலாம்
இசையிலே மிதக்கலாம் எதையுமே மறக்கலாம்
இசையிலே மிதக்கலாம் எதையுமே மறக்கலாம்

என்னை தெரியுமா –
நான் சிரித்து பழகி கருத்தை கவரும் ரசிகன்
என்னை தெரியுமா
உங்கள் கவலை மறக்க கவிதை பாடும் கவிஞன்
என்னை தெரியுமா
ஆஹா ரசிகன் ஆஹா ரசிகன்
நல்ல ரசிகன் நல்ல ரசிகன்
உங்கள் ரசிகன் உங்கள் ரசிகன்

ஒரு சிலையை கண்டேனே அது சிரிக்க கண்டேனே
இந்த அழகு என்ன அழகு என்று மயங்கி நின்றேனே
வானிலே ஒரு நிலா நேரிலே இரு நிலா
காதல் அமுதை பொழியலாம்
அவள் அருகில் வந்து பழக – நான் மெழுகு போல உருக
இதழ் பிழிய பிழிய தேனை எடுத்து எனக்கு தந்தாளே
கொடுத்ததை நினைக்கலாம் கொடுத்தவள் மறக்கலாம்
கொடுத்ததை நினைக்கலாம் கொடுத்தவள் மறக்கலாம்

என்னை தெரியுமா – நான் சிரித்து
பழகி கருத்தை கவரும் ரசிகன் என்னை தெரியுமா
உங்கள் கவலை மறக்க கவிதை பாடும் கவிஞன்
என்னை தெரியுமா

# 11500 ஆண்டுகளுக்குப் பின் ஒலிக்கும் ஊளை ஒலி

11,500 ஆண்டுகளுக்கு முன்பு முற்றிலும் அழிந்து போன பயங்கர ஓநாய்க்கு ஆராய்ச்சியாளர்கள் மறுபிறப்பு வழங்கியுள்ளனர்.

12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்கக் கண்டத்தில் ஒரு பயங்கர ஓநாய் இனம் சுற்றித்திரிந்தன. இதனை ஆங்கிலத்தில் dire wolf என அழைக்கின்றனர். இதன் அறிவியல் பெயர் அனோசியான் டைரஸ்.

பல்வேறு காரணங்களால் இவை 11,500 ஆண்டுகளுக்கு முன்னரே முற்றிலும் அழிந்து விட்டன. இந்த ஓநாய்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்துள்ளனர். விஞ்ஞானிகளின் இந்தச் சாதனை எப்படி சாத்தியமானது என்பதை பார்ப்போம்.

கொலோசல் பையோசையன்ஸ் என்ற ஒரு பையோடெக் நிறுவனம் அமெரிக்க மாநிலமான டெக்சாசில் உள்ள டலசில் நகரில் உள்ளது. இந்த நிறுவனம் 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதுதான் முற்றிலும் அழிந்து போன இந்த ஓநாயை மீண்டும் உயிர் பெற முயற்சித்தது. இந்த முயற்சி வெற்றி பெற்று மூன்று ஓநாய் குட்டிகள் பிறந்துள்ளன. இவற்றுக்கு "ரோமுலஸ், ரேமூஸ், கலீசி" எனப் பெயரிட்டனர்.

புதிதாகப் பிறந்த இந்தப் பெண் ஓநாய் குட்டிக்குக் கலீசி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த மூன்று ஓநாய் குட்டிகள் சாதாரணமானவை இல்லை. இவை 11,500 ஆண்டுகளுக்கு முன்னர் முற்றிலும் அழிந்து போனவை.

இந்த ஓநாய்களை உருவாக்கக் கொலோசல் பையோசையன்ஸ் நிறுவனம் இரண்டு ஓநாயின் புதைபடிமங்களைக் கண்டறிந்தனர். இதனில் ஒன்று 11,500 ஆண்டுகளுக்கு முன் மாண்டுபோன ஓநாயின் எலும்புக் கூடு. இரண்டாவது எலும்புக்கூடு 72,000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த இந்த வகை ஓநாயின் எலும்புக் கூடு.

இந்தப் பழைமையான ஓநாயின் எலும்புக் கூடுகளின் காதில் உள்ள சிறு எலும்புகள் மற்றும் அதன் கூர்மையான பற்களிலிருந்து இதன் மரபணுத் தொகுப்புகள் பிரித்தெடுக்கப்பட்டது.

இந்த மரபணுத் தொகுப்பு 240 கோடி மரபணுக் காரணிகளால் ஆன மிகப் பெரிய DNA துண்டுகள். இந்த மரபணு துண்டுகளின் எண்ணிக்கை மொத்தம் 76. ஒவ்வொரு துண்டுகளும் ஒரு குரோமோசோம்கள் என்பதுதான் உண்மை.

அதாவது நம் உடலில் உள்ள செல்களில் மொத்தம் 46 குரோமோசோம்கள் உள்ளன. இந்த ஓநாயின் உடலில் உள்ள செல்களில் 76 குரோமோசோம்கள் இருக்கின்றன.

இப்படி ஒருவழியாக மரபணுக் குறைபாடுகள் இல்லாத இந்த ஓநாயின் மரபணுத் தொகுப்பை உருவாக்கினார்கள். ஆகையால் இது முற்றிலும் அழிந்த ஓநாயின் 100 விழுக்காட்டு மரபணுத் தொகுப்பு எனச் சொல்ல முடியாது. ஆனால் 99.5 விழுக்காடு இது அந்த ஓநாயின் மரபணுத் தொகுப்பு என்பதனை மறுக்கவும் முடியாது!

அடுத்து ஒரு நாயின் கருமுட்டையை எடுத்துக் கொண்டனர். கரு முட்டையின் உட்கருவில் நாயின் மரபணுத் தொகுப்புக்கள் இருக்கும். அவைகளைக் கவனமாக அப்புறப்படுத்தினார்கள்.

பின்னர் அந்த இடத்தில் மரபணு சீர்திருத்தப்பட்ட முற்றிலும் அழிந்து போன பயங்கர ஓநாயின் 76 மரபணுக்களையும் கொண்டு போய்த் திணித்தனர்.

இந்த மரபணு மாற்றப்பட்ட கருமுட்டையை நாயின் கருப்பையில் கொண்டு போய் வைத்தனர். கரு வளர ஆரம்பித்தது. பின்னர் இது சுமார் இரண்டு மாதத்தில் குட்டிகளை ஈன்றெடுத்தது. பிறந்தது நாய்க் குட்டி அல்ல. 11,500 ஆண்டுகளுக்கு முன் முற்றிலும் அழிந்து போன பயங்கர ஓநாயின் குட்டிகள்!

ரோமுலஸ் மற்றும் ரேமூஸ் என்ற ஆண் ஓநாய் குட்டிகள் கடந்த 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத முதல் நாளிலும் கலீசி என்ற பெண் குட்டி இந்த ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதியிலும் பிறந்தது. முற்றிலும் வளர்ந்த ஓநாய்கள் உருவத்தில் பெரியவை. சுமார் 70 கிலோ வரை உடல் எடை கொண்டவை. அதீத உடல் வலிமை வாய்ந்தவை. இந்த ஓநாய் கள் தமக்கே உரிய தனித்துவமான முறை யில் ஊளையிடுகிறன. கடந்த 11,500 ஆண்டுகளாய் நின்று போன இந்த ஊளைச் சத்தம் மீண்டும் பூமியில் கேட்கத் தொடங்கியுள்ளது. முற்றிலும் வளர்ந்த இந்தப் பயங்கர ஓநாய்கள் அகன்ற தலைகள், பெரிய கோரைப் பற்கள் மற்றும் சக்திவாய்ந்த உடலமைப்பைக் கொண்ட திடகாத்திரமானவை.

மேலும் இவை காட்டெருமை மற்றும் கரடி போன்ற பெரிய விலங்குகளையும் வேட்டையடக் கூடிய வலிமை படைத்தவை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமா

## சினி துளிகள்...



மகாபாரதம் கதையைப் படமாக்க தீவிரமாக முயற்சி செய்துகொண்டிருக்கிறார் இயக்குநர் லிங்குசாமி. அதற்கான ஏற்பாடுகளுக்கு அடிக்கடி மும்பை சென்று வருகிறார். பெரிய பட்ஜெட்டில் படம் அமையப் போவதாலும் அதற்கு அதிக காலம் தேவைப்படும் என்பதாலும் தெலுங்கில் ஒரு படத்தை சட்டென்று முடித்துவிட்டு, மகாபாரதத்தைக் கையில் எடுப்பாராம்.



சூர்யா, வெற்றிமாறன் கூட்டணியின் "வாடிவாசல்" படப்பிடிப்பு ஜூலையில் தொடங்குகிறது. இந்தப் படத்துக்காக அழகான மெலடி பாடல் ஒன்றை இசையமைத்துக் கொடுத்திருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். டைரக்டர் வெற்றி மாறன் என்னிடம் "வாடிவாசல்" படத்தின் திரைக் கதையிலிருந்து ஒரு அரை மணி நேரம் மட்டும் விவரித்தார். அவ்வளவு ஃப்ரெஷ்ஷாக இருந்தது என பிரமிக்கிறார் தயாரிப்பாளர் தாணு.



"பொன்னியின் செல்வன்" படத்திற்குப் பின் சத்தமே இல்லாமல் இருந்த விக்ரம் பிரபு, மீண்டும் அசத்த ரெடியாகிவிட்டார். தெலுங்கில் கிரிஷ் ஜகர்தலமுடியின் இயக்கத்தில் 'ghaati' என்ற படத்தில் முரட்டுத் தோற்றத்தில் மிரட்டியிருக்கிறார். இந்தப் படம் தமிழிலும் வெளியாகிறது. இதையடுத்து "லவ் மேரேஜ்" என்ற படத்திலும் நடித்திருக்கிறார். மம்மூட்டி நடித்த "டொமினிக் அண்ட் தி லேடீஸ் பர்ஸ்" பட புகழ் நடிகை சுஷ்மிதா பட் இதில் நாயகி.



சமீபத்தில் ஓ.டி.டியில் வெளியான "டெஸ்ட்" படத்தில் குமுதாவாக ஸ்கோர் செய்திருந்த நயன்தாரா, அடுத்த ஆண்டு வரை கைவசம் நிறையப் படங்கள் வைத்திருக்கிறார். அதில் "மண்ணாங்கட்டி சின்ஸ் 1960" படத்தை முடித்துக்கொடுத்து விட்டார். இதையடுத்து "மூக்குத்தி அம்மன் 2", "ராக்காயி"என அடுத்தடுத்து ஒரே சமயத்தில் படப்பிடிப்பு போய்க்கொண்டிருக்கிறது. இந்த மூன்றும் இந்த ஆண்டு வெளிவருகின்றன. அதைப்போல, "கே.ஜி.எஃப்" ஹீரோ யஷ் உடன் நடித்துவரும் பேன் இந்திய படமான "டாக்ஸிக்" அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வெளியாகிறது.

## விமானியை கரம் பிடிக்கிறார் நடிகை ஜனனி

இயக்குநர் பாலாவின் **"அவன் இவன்"** படத்தின் மூலமாக தமிழ் சினிமாவில் நடிகையாக அறிமுகமானவர் ஜனனி. இத்திரைப்படத்தை தொடர்ந்து அசோக் செல்வனுடன் அவர் நடித்திருந்த **"தெகிடி"** திரைப்படமும் மக்களிடம் பெரிதளவில் வரவேற்பைப் பெற்றது.

நடிகை ஜனனிக்கும் சாய் ரோஷன் ஷ்யாம் என்பவருக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றிருக்கிறது. தனக்கு நிச்சயதார்த்தம் நடைபெற்றிருப்பதாகத் தனது சமூக வலைதளப் பக்கத்தில் புகைப் படங்களை பதிவிட்டு அறிவித்திருக்கிறார் ஜனனி.

சாய் ரோஷன் ஷ்யாம் ஒரு விமானி. அது தொடர்பான பதிவுகளையும் தனது சமூக வலைதளப் பக்கங்களில் போட்டிருக்கிறார் ஜனனி.



விஜய் டிவி தொகுப்பாளினி பிரியங்கா தேஷ்பாண்டே திடீரென இரண்டாவதாக வசி என்பவரை திருமணம் செய்துகொண்டுள்ளார்.

வசி என்பவர் பல கார்பரேட் நிகழ்ச்சிகள் மற்றும் பப்புகளில் டிஜேவாக பணியாற்றி உள்ளார். மேலும், இவர் ஈவண்ட் மேனேஜ்மெண்ட் கம்பெனி ஒன்றையும் சொந்தமாக நடத்தி வருகிறார்.



## "நீ மறைந்திருக்கலாம் ஆனால் யாராலும் மறக்கப்படவில்லை" தங்கை மோனல் குறித்து சிம்ரன் உருக்கம்!



90களின் கனவுக் கன்னியாக வலம் வந்தவர் நடிகை சிம்ரன். இவரைப் போலவே திரைத்துறையில் பெரும் வெற்றிகளைப் பெற்று ஆதிக்கம் செலுத்துவார் என "பார்வை ஒன்றே போதுமே" திரைப்படத்தில் அறிமுகமானபோதே எதிர்பார்ப்பைக் கிளப்பியவர் சிம்ரனின் தங்கை மோனல் நாவல். தொடர்ந்து 2000களின் தொடக்கத்தில் தமிழ் சினிமாவில் முக்கியமான நடிகையாக இருந்தார். "பத்ரி", "சமுத்திரம்", "சார்லி சாப்ளின்" போன்ற திரைப்படங்களில் நடித்து முன்னணி நடிகையாக வளரத் தொடங்கினார்.

ஆனால், 2002ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி திடீரென அவர் தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தி திரையுலகை அதிரச் செய்தது. அப்போது அவருக்கு வயது 21. இவரின் தற்கொலைக்குப் பின்னணியில் காதல் விவகாரம் இருப்பதாக வதந்திகள் பரவியது. அவர் எழுதியதாக வெளியான தற்கொலைக் குறிப்பில் கூட "வாழ்க்கையில் உண்மையான ஆண்மகனை நான் சந்திக்கவே இல்லை" எனக் குறிப்பிட்டதாக கூறப்படுகிறது. நடிகை மோனலின் மரணம் குறித்துப் பேசும்போதெல்லாம் உடைந்துவிடுவார் அவரின் சகோதரி நடிகை சிம்ரன்.

ஒவ்வொரு வருடமும் மோனலின் நினைவு நாளை அனுசரித்து வரும் நடிகை சிம்ரன், தன் எக்ஸ் பக்கத்தில், இந்த 23 வருடங்களில் ஒருநாள்கூட உன்னை நாங்கள் நினைக்காமல் இருந்ததில்லை மோனல். நீ மறைந்திருக்கலாம் ஆனால் யாராலும் மறக்கப்படவில்லை" எனக் குறிப்பிட்டிருக்கிறார். சிம்ரனின் இந்தப் பதிவு அவரின் ரசிகர்களால் பகிரப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 446

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# அன்பு என்னும் அருமருந்து

மனம் அன்புமயமாகி நிற்கும்பொழுது ஏற்படும் அளவு கடந்த ஆறுதலும் அமைதியும் மனிதனுக்கு பேராற்றலையும், துல்லியமாகச் செயற்படும் திறனையும், நோய்களை எதிர்க்கும் வல்லமையும் வழங்கி நிற்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டி நிற்கின்றன.

இறைவன் அன்பு மயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வ வல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

மனச்சஞ்சலங்களே பல நோய்களுக்கு வித்திடுகின்றன. இந்த மனச் சஞ்சலங் களை அகற்றும் அருமருந் தாய் அன்பு மிளிர்கிறது.

எம் மீதும் எமது குடும்பத்தின் மீதும் அன்பு கொள்வோம். எமது சுற்றம், உறவுகள், நண்பர்கள் அனைவர் மீதும் அன்பு கொள்வோம். ஊர், தேசம், மொழி, கலை, கலாசாரம் அனைத்தின் மீதும் அன்பு கொள்வோம்.

உலவிவரும் உயிர்களிலும் இயற்கையிலும் அன்பு கொள்வோம். இந்த அன்பினால் ஏற்படும் மன அமைதி உடலின் நோய் எதிர்ப்பு படைபலத்தைப் பெருக்கும்.

ஒருவரை விமர்சித்து மதிப்பிட்டு அவருடன் முரண்பட்டு, கோபமுற்று, போட்டியிட்டு அவரின் நடத்தைகளை மாற்ற முயன்று, வாதிட்டு எமது மன அமைதியையும், நேரத்தையும் மனமகிழ்வையும் விரயமாக்குவது ஆரோக்கியம் ஆகாது.

அதற்குப் பதிலாக அவரை அவரது தனித்துவங்களுடனும் குணாதிசயங்களுடனும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, சேர்த்துக் கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்வது பயன் தரும்.

வாதிட்டுப் பேசும் வார்த்தைகளிலும் பார்க்க மௌனங்கள் பலமானவை. பல அர்த்தங்கள் பொதிந்தவை. மௌனங்களும் மன்னிப்புகளும் பலரைச் சிந்திக்கவைத்து நல்வழிப்படுத்தும்.

எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு வைக்கும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதே சமயம் அது முடியாத விடயமுமல்ல.



எம்மைப் பிறர் வெறுப்பதற்குக் காரணம் என்ன? நாம் பிறரை வெறுப்பதற்குக் காரணம் என்ன? எமது எதிரியாக நாம் கருதிக் கொள்பவர்களிடம் புதைந்து கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக்கொள்ள என்ன செய்யலாம்? சிந்திப்போம்.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் அன்புமயமானவர்கள் தான். அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது.

எம்மைப்பலர் வெறுப்பதற்கும், நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படையாய், காரணமாய் இருப்பது என்ன என்பதை நாமே அறிந்து கொள்வது இலகுவான காரியமல்ல.

ஆனால் இந்த வெறுப்புணர்வுதான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் முதல் எதிரி என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டி இருக்கிறது.

எதிரியிலும் அன்பு கொண்டு மன்னித்து எமது பாதையைத்தற்காத்து தடம் மாறாது பயணிக்கும் மனத்திடத்தை வளர்த்துக் கொள்வது உடல், உள, சமூக நன்னிலையான, உண்மையான ஆரோக்கியத்துக்கு வழி சமைக்கும்.

கோபமும், வெறுப்பும், பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும், ஆளுமையையும், வளர்ச்சியையும், மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகின்றது.

இந்தப் பொது எதிரியானவன் எமது பொன்னான நேரத்தின் பெரும் பகுதியையும் விழுங்கி ஏப்பம் விட்டு விடுகின்றான்.

இந்த எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிப்பது ஒரு இலகுவான போர் அல்ல. பல தடவைகள் நாம் அந்தப் போரில் தோற்றுவிடுகிறோம். ஆனாலும் இந்தத் தோல்விகள் நிரந்தரமானவையல்ல.

அன்பு என்னும்பேராயுதத்தை சரியான முறையில் கையாளக் கற்றுக்கொண்டால் நாம் பல தொற்றா நோய்களையும் வாழ்வின் தடைகளையும் வெற்றி கொண்டு சுகமான விடியலை நோக்கிப் பயணிக்க முடியும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்,
யாழ் போதனா
வைத்தியசாலை.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு வருஷ' புத்தாண்டு பலன்கள்



**கன்னி:** கிரகநிலை - ராசியில் கேது - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி - களத்திர ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன் - பாக்கிய ஸ்தானத்தில் குரு - இலாப ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 26.04. 2025 அன்று ராகு பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று கேது பகவான் ராசியில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 02.07.2025 அன்று சனி பகவான் வக்ர நிலை ஆரம்பம். 17.11.2025 அன்று சனிபகவான் வக்ர நிவர்த்தி அடைகிறார். 06.03.2026 அன்று சனி பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

11.05.2025 அன்று குரு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08.10.2025 அன்று குரு பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18.11.2025 அன்று குரு பகவான் வக்ரம் ஆரம்பம்.

21.12.2025 அன்று வக்ர நிலையில் இருக்கும் குரு பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.03.2026 அன்று குரு பகவான் வக்ர நிவர்த்தி.

**பலன்கள்:** உழைப்பின் மூலம் உன்னதமான இடத்தைப் பெறும் கன்னி ராசி நேயர்களே! முடிவு கிடைக்காமல் தவித்த விடயங்களுக்கு தானாகவே முடிவு கிடைத்துவிடும். சூழ் நிலைகள் உங்களுக்கு சாதகமாக மாறும். நேர்முக மறைமுக எதிர்ப்புகள் தானாக விலகும். எதிரிகளுக்குச் சரியான பதிலடி கொடுப்பீர்கள். வழக்குகளிலும் உங்களுக்கு சாதகமான தீர்ப்புக் கிடைக்கும். வருமானம் சிறப்பாக இருக்கும்.

பழைய கடன்களும் வசூலாகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருந்தாலும் யோகா, பிராணாயாமம் போன்றவற்றைச் செய்து வரவும். சமூகத்தில் மதிப்பு, கௌரவம் இரண்டும் உயரத் தொடங்கும். குடும்பத்தில் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். அவர்களை வெளிநாடு அனுப்பி படிக்க வைப்பீர்கள். உடன்பிறந்தோருக்கு தக்க நேரத்தில் உதவிகள் செய்து அவர்களது நேசத்தைப் பெறுவீர்கள். வெளிப்படையாகப் பேசுவதையும் தவிர்க்கவும். பெற்றோருக்குச் சிறிது மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம்.

அரசாங்கத்திலிருந்து நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பு கிடைக்கும். வாக்குவாதங்களில் சமர்த்தர் என்று பெயரெடுப்பீர்கள். உங்கள் பேச்சில் தத்துவக் கருத்துகள் மிகுந்திருக்கும். மனதிலிருந்த சஞ்சலங்களும் குழப்பங்களும் மறைவதுடன் குடும்பத்தில் சந்தோஷமும் நிறையும். புதிய தொழில் முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வரும் வாய்ப்புகளும் கிட்டும். சிலருக்கு குலதெய்வ வழிபாடுகளும் கைகூடும். மேலும் கடின உழைப்பை மேற்கொள்ள வேண்டிய காலகட்டமிது என்றால் மிகையாகாது.

**உத்தியோகத்தர்களுக்கு** அலுவலகப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். எதிர்ப்புகளையும் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். சக ஊழியர்களுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். மேலதிகாரிகளின் கெடுபிடிகளிலிருந்து விடுபடுவீர்கள். பணவரவுடன் பதவி உயர்வும் கிடைக்கும். சிலருக்கு விரும்பிய இடமாற்றமும் கிடைக்கும். சிலர் வெளிநாட்டுக்குச் சென்று பணிபுரியும் வாய்ப்புகளையும் பெறுவர்.

**வியாபாரிகளுக்கு** கொடுக்கல் வாங்கல் விடயங்கள் இலாபகரமாக முடியும். புதிய பொருள்களை விற்பனை செய்து மேலும் இலாபத்தை அள்ளுவீர்கள். புதிய விற்பனை பிரதிநிதிகளை நியமிப்பீர்கள். மனதிலிருந்த குழப்பங்கள் விலகும். மேலும் போட்டியாளர்களின் மனமறிந்து சந்தையில் விலையை நிர்ணயித்து வியாபாரம் செய்ய நேரிடும்.




விவசாயிகளுக்கு உற்பத்தியில் நல்ல பலன் கிடைக்கும்.

**அரசியல்வாதிகள்** பெரிய சாதனைகள் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர். பதவிகள் உங்களைத் தேடி வரும். உங்களின் இரகசியத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிரிகளின் பலம் குறையும். சிலருக்கு வழக்குகளில் சாதகமான தீர்ப்பு வந்து விடுவிக்கப்படுவர். தொண்டர்களின் நலனில் கூடுதல் அக்கறை செலுத்தி அவர்களின் ஆதரவையும் தக்க வைத்துக் கொள்வீர்கள்.

**கலைத்துறையினர்**- முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். ஒப்பந்தங்களில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். திறமைக்குத் தகுந்த அங்கீகாரத்தையும் பெறுவர். சக கலைஞர்களால் பாராட்டப்படுவார்கள்.

**பெண்கள்**- கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். குடும்பத்தாரிடம் அன்பு பாசத்தோடு பழகுவர். மனதில் உற்சாகத்தைக் கூட்டிக் கொண்டு செயற்படுவீர்கள். கடமைகளில் சலிப்பு உண்டானாலும் மனதில் உற்சாகத்தைக் கூட்டிக் கொண்டு செயற்படுவர். சேமிப்பு விடயங்களில் கவனம் செலுத்துவர்.

**மாணவர்கள்**- உங்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். பாடங்களை மனப்பாடம் செய்ய போதிய பயிற்சிகளையும் மேற்கொள்வர். தேவையான உடற்பயிற்சிகள் செய்து உடல் பலத்தைக் கூட்டிக் கொள்வதுடன் வருங்காலத் திட்டங்களுக்கு அஸ்திவாரமும் போடுவீர்கள்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு மேலதிகாரிகளின் அனுசரனை இருந்துவரும். வியாபாரிகள் சிறப்பான முன்னேற்றத்தைப் பெறலாம், இலாபம் அதிகரிக்கும். உங்கள் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். எதிரிகளை வீழ்த்துவதற்குண்டான பாதைகளை வகுத்துக் கொள்வீர்கள்.

## உழைப்பின் மூலம் உன்னதமான இடத்தைப் பெறும் கன்னி ராசி நேயர்களே!

**அஸ்தம்:** இந்த ஆண்டு புதியதாக ஆரம்பித்த தொழிலில் ஏற்றம் உண்டு. இரும்பு தொடர்பான தொழிலில் அதிக வருவாய் வந்து சேரும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை பலம் ஏற்படும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு புதிய ஒப்பந்தங்கள் சற்றுத் தாமதமாக வந்தாலும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். பொருளாதாரம் எதிர்பார்த்தபடி இருக்காது. உடன் இருப்போரால் பிரச்சினைகள் வரலாம்.

**பரிகாரம்:** புதன்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று தேங்காய் நெய் விளக்கு ஏற்றி வழிபடவும். முடிந்தவர்கள் தினசரி ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ர நாமம் பாராயணம் செய்யலாம். "துளசி"யை பெருமாளுக்குச் சாத்தி அர்ச்சனை செய்து வணங்கி வரத்தடைகள் விலகி நன்மைகள் கிடைக்கப் பெறுவீர்கள். சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் மாறும். மேற்கு, தெற்கு ஆகிய திசைகள் அனுகூலம் தரும். புதன் குரு நன்மையைத் தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவில் உயிர்த்தெழுவோம்



இன்று நம் ஆண்டவராகிய இயேசுவின் உயிர்ப்பின் பெரு விழாவை நாம் கொண்டாடி மகிழ் கின்றோம். ஆண்டவராகிய இயேசு தமது மரணம், உயிர்ப்பைப்பற்றி தமது சீடர்களுக்கு மூன்று முறை முன்னறிவித்தபோது "தாம் கொலை செய்யப்பட்டு மூன்றாம் நாள் நிச்சய மாக உயிருடன் எழும்பி வருவேன்" என்று கூறியதாக சம நோக்கு நற்செய்தியாளர்கள் எழுதியுள்ளனர். திருத்தூதர் யோவானும் "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன் உங்களிடம் திரும்பி வருவேன்" (யோவான் -14:18) என்று ஆண்டவராகிய இயேசு தமது உயிர்ப்பைப்பற்றி தங்களிடம் முன்னறிவித்ததாக எழுதியுள்ளார். அதேவேளை ஆண்டவராகிய இயேசு தங்களுக்கு முன்னறிவித்தபடி இறந்த பின் மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்து தம்மை சந்தித்ததாகவும் "அவரோடு உண்டு குடித்த தாங்களே இதற்கு சாட்சிகள் (தி.பணி 10:4) என்று அவரது சீடர்கள் சான்று பகர்ந்தனர் திருத்தூதர் பவுலும், கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" (1கொரி 15:14) என்று எடுத்துரைக்கின்றார். சீடர்களின் சான்றுதான் ஆண்டவராகிய இயேசு வின் உயிர்ப்பிற்கு ஆதாரம். இந்த ஆதாரம் தான் திருச்சபையின் விசு வாச அஸ்திபாரம்.

அதேவேளை உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுவின் அரு ளையும்,பேரானந்தத்தையும்உணர்ந்து கொள்ள உயிர்த்தெழுதல் என்பது என்ன என்று நோக்கும் போது "சாவு என்ற வாயிலில் நுழைந்து இனிமேல் சாவே இல்லை என்ற நிலைக்கு வருவதுதான் உயிர்த்தெழுதல்" திருத் தூதர் பவுலும் இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கின்றோம். (உரோ 6:9) என்று கூறுகின்றார்.

ஆண்டவராகிய இயேசு இறந்த இலாசரையும் (யோவா 11:43) இறந்த யாயீரின் மகளையும் (மாற் - 5:42) இறந்த நயீன் ஊர் கைம் பெண்ணின் மகனையும் (லூக்கா -7:15) உயிர்பித்தார். அவர்கள் அனைவரும் தங்களுடைய பழைய வாழ்க்கைக்குத் திரும்பினார்கள். பல ஆண்டுகள் வாழ்ந்து இறந்தார்கள் ஆனால் ஆண்டவராகிய இயேசுவின் உயிர்ப்பு அத்தகைய உயிர்ப்பு அல்ல. சாவின் ஆட்சியில்லாத வாழ்க் கைக்குத்தான் அவர் சென்றார். அவ் வாழ்க்கையைப்பற்றி தெளிவாக எவருக்கும் தெரியாது ஏனென்றால் நாம் அறிவது சாவோடு முடியும் ஒரு வாழ்க்கையைத்தான் ஆண்டவராகிய இயேசு வானக தந்தையாம் இறைவ னின் விருப்பத்தை நிறைவேற்றியதால் தந்தை மகனுக்கு அளித்த பரிசல்ல உயிர்த்தெழுதல் மாறாக அது தம் மைந்தராகிய இயேசுவிடம் நம்பிக்கை கொள்வோர் அனைவருக்கும் அருள ப்பட்ட ஒப்பற்ற பரிசாகும் எனவே உயிர்த்தெழும் வரத்தையும், நிலை வாழ்வையும் பெற்றுக்கொள்ள இயே சுவிடம் நம்பிக்கை கொள்வது அவ சியமாகும்.

ஏனெனில் "உயிர்த்தெழச்செய்பவ னும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான்-11:25) என்று ஆண்டவராகிய இயேசு எமக்கு கூறுகின்றார்.

இதை நாம் உணர்ந்துகொள்ளும் போது நமது உள்ளம் அக்களிப்பு கொள்வது உறுதி "எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" (மத் 28:20) என்பது தான் உயிர்ப்பு பெருவிழா நற்செய்தி.

அருள்நேசன், குருநகர்.

# ரஷ்யா-உக்ரைன் போர் நிறுத்தம் சாத்தியமானால் மத்தியஸ்தம் தொடரும்

## அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

ரஷ்யா- உக்ரைன் இடையே சமரசம் செய்யும் பணியி லிருந்து விலக அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக அமெ ரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டிய, முன்னுரிமை அளிக்க வேண் டிய விடயங்கள் ஏராளம் உள்ளன எனவும், எந்த முன்னேற்றமுமின்றி, அமை திப்பேச்சுவார்த்தையை மாதக் கணக்கில் தாம் தொடரப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் போர் நிறுத் தம் குறித்து விரைவாக தீர் மானிக்க வேண்டும் எனவும், அது சாத்தியம் என்றால் மட்டுமே, ஜனாதிபதி ட்ரம்ப் அதற்கான மத்தியஸ்த முயற் சிகளை தொடர்வார் எனவும், இல்லாவிட்டால், இன்னும் சில தினங்களில், ரஷ்யா -உக்ரைன் போர் நிறுத்த முயற்சியை அமெரிக்கா கைவிடும் எனவும் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

உக்ரைன்-ரஷ்யாஇடையே, மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வரும் நிலையில் அமெரி க்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரியில் பதவியேற்ற ட்ரம்ப், இரு நாடுகளிடை யேயான போரை நிறுத்த முயற்சியை ஆரம்பித்து வைத் திருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (நி-8)

## ஆப்கானில் நிலநடுக்கம்

# டில்லி, காஷ்மீரில் குலுங்கிய கட்டடங்கள்

(காபூல்)

ஆப்கானிஸ்தான், தஜிகிஸ் தான் எல்லையில் 86 கி.மீ., ஆழத்தில் நிலநடுக்கம் ஏற் பட்டது. நேற்று நண்பகல் 12.17 மணிக்கு ரிக்டர் அளவு கோலில் 5.8 ஆக இந்த நில நடுக்கம் பதிவானது.

நிலநடுக்கம்எதிரொலியாக கட்டடங்கள் அதிர்ந்தன. இத னால் மக்கள் அச்சம் அடை ந்து கட்டடங்களை விட்டு வெளியேறினர். நிலநடுக்கத்தால் ஏதே னும் பொருட்செலவு, உயிரி ழப்பு ஏற்பட்டதா என்ற எந்த தகவல்களும் வெளியாக வில்லை.

இந்த நிலநடுக்கம் ஜம் முகாஷ்மீர், பஞ்சாப், டில்லி உள்ளிட்ட பல வட மாநில பகுதிகளிலும் உணரப்பட்டது. பாகிஸ்தானில், இஸ்லா மாபாத், ராவல்பிண்டி, லாகூர் என பல நகரங்களும் குலுங் கின. (நி-8)

# எலான்மஸ்க்-மோடி கலந்துரையாடல்

(டில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், உலகின் மிகப் பெரும் செல்வந்தரான எலான் மஸ்கிற்கும் இடையே தொலை பேசி வழியாக கலந்துரை யாடலொன்று இடம்பெற்றுள் ளது.

இதன்போது தொழில்நுட் பம் உள்ளிட்ட பல துறைகள் குறித்து கலந்துரையாடப்பட் டுள்ளதாக இந்தியப் பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியா, அமெரிக்காவு டன் இருதரப்பு வர்த்தக ஒப் பந்தங்களை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வரும் நேரத்தில் இந்த தொலை பேசி உரையாடல் நடைபெற் றுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வோன்ஸ் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை இந்தி யாவிற்கு வருகை தரவுள் ளார் என்பதும் குறிப்பிடத்தக் கது. (நி-8)

# கொங்கோ படகு விபத்து உயிரிழப்பு அதிகரிப்பு



(கின்சாசா)

கொங்கோவில் ஆற்றில் சென்ற மரப்படகு தீப்பிடித்து ஏற்பட்ட விபத்தில் உயிரி ழந்தவர்களின் எண்ணி க்கை 148 ஆக உயர்ந்துள் ளது. மேலும் 100 பேர் மாய மாகி உள்ளனர். அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் உள்ள ஆறு களில் படகு போக்குவரத்து முக்கியமான ஒன்றாக இருக் கிறது. அங்கு வசிக்கும் மக்கள் படகு போக்குவரத்தை விரும்புகின்றனர். வடமேற்கு கொங்கோவில் உள்ள மடான் குமு துறைமுகத்தில் இருந்து போலோம்பா பகுதி க்கு ஒரு மோட்டார் படகில் 500இற்கும் மேற்பட்டோர் பய ணம் மேற்கொண்டனர்.

பன்டாக்கா பகுதியில் படகு சென்று கொண்டிருந்த போது பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. படகில் பயணம் செய்தவர்கள் தீ விபத்தில் இருந்து தப்பிக்க ஆற்றில் குதித்தனர். இதில் படகு ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 148 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 100 பேர் மாயமாகி உள்ளனர்.

அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. மேலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என மீட்பு படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். விபத்தி ற்கான காரணம் குறித்து விசா ரணை நடந்து வருகிறது.

விபத்தில் இருந்து தப் பிய 100 பேர் உள்ளூர் டவுன் ஹாலில் உள்ள ஒரு தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். காய மடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதியின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள்



யாழ். பல்கலையில்



கிளிநொச்சியில்



வவுனியாவில்

# கடவுச்சீட்டு கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரேமண் டானியேல் என்பரது (N5107846) கடவுச்சீட்டு வீதியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிப் பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டி வலம்புரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (6-8)



# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கிபா-51 1/2 8 இல் செவ்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்:HNDA, Newzeland<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/15337 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:22 1/2<br>உயரம்: 5' 3'<br>தகைமை/தொழில்: Engineering, Engineer(Australia)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: G/15388 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 7 இல் செவ்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: O/L, Studio(own)<br>எதிர்பார்ப்பு-தகுதியான பெண்<br>தொ.இ: B/15338 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 12 இல் சூரி செவ்<br>கிபா:35 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15389 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: O/L, Carpenter<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15339 | பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 45 1/4<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்: BA,DO(gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11011 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# இராசிபலன்

20.04.2025
சித்திரை 07, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி பிற்பகல் 2.58 மணிவரை
பூராடம் முற்பகல் 8.10 மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் -4.32- 6.02 மணிவரை
உயிர்ப்பு ஞாயிறு

சந்திராஷ்டமம்
திருவாதிரை

வளவன்

**மேஷம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**ரிஷபம்** மனக்குழப்பங்கள் தீர நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்.

**சிம்மம்** சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உதிரி வருமானங்கள் பெருகும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பெரியவர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள், சுப காரியச் செலவுகளில் நாட்டம் கூடும், பயணங்களால் மனச்சேர்வு ஏற்படலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**மீனம்** செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

அன்புள்ள சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் மகனை...

பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அவர்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த வியாழக்கிழமை கொடிகாமத்தைச் சேர்ந்த சிவராசா சிலுசன் (வயது - 23) என்ற இளைஞன் வரணியில் குளத்தில் நீராடியபோது தாமரைக் கொடியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் தங்கள் மகன் நீரில் மூழ்கி மரணிக்கவில்லை அவரைக் கொலை செய்துவிட்டனர் எனக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அவர்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த வியாழக்கிழமை எனது மகன் குளித்துவிட்டு வந்தவேளை 3.00 மணிக்கு பின்னர் எனது மகனை அவரது நண்பர் அழைத்துச் சென்றார். அவருடன் சென்றுகொண்டிருந்தபோது இன்னொரு நண்பர் குளிக்க வருமாறு தொலைபேசியில் கூறியவேளை எனது மகன் அவரிடம் சென்றுள்ளார். இதன்போது கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அவர்களுடன் இருந்துள்ளார்.

அந்தக் கேணியில் யாரும் குளிப்பதில்லை. அது கோவில் கேணி. தாமரைக் கொடி சிக்கி உயிரிழந்ததாகக் கூறியது பொய். அந்தக் கேணியில் தாமரை கொடியே இல்லை. மரண விசாரணை அதிகாரி, பொலிஸார், சட்டத்தரணி உள்ளிட்ட பலர் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) அந்தப் பகுதிக்கு வந்தனர். இரண்டுபேரை அந்த குளத்தில் இறக்கி குளத்தை பரிசோதித்துப் பார்த்தனர், ஆனால் இருவரும் எந்தவிதமான பாதிப்புமின்றி வெளியே வந்தனர். உயிரிழந்த மகனின் சேட்டும், செருப்பும் குளத்தின் கரையில் இருந்தது.

கேணியின் அருகே 3 ரின்கள் இருந்தன. ஆனால் உடற்கூற்றுப் பரிசோதனைகளில் இவர் (மகன்) மதுபானத்தை பாவித்ததாக அறிக்கையில் கூறப்படவில்லை. தண்ணீர் சுவாசப்பையின் உள்ளே சென்று அடைத்ததால் தான் மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் கூறப்படுகிறது. தோளில் பிடித்து அமுத்திய கண்டல் காயம் உள்ளது.

அவரது சடலம் தாண்டு இருந்த இடத்தில் ஒரு நீளமான மீற்றர் கட்டை ஒன்று குற்றப்பட்டு இருந்தது. அப்படி அவர் தாழ்ந்திருந்தால் அந்தக் கட்டையில் பிடித்து ஏறியிருப்பார்.

மந்திகை வைத்தியசாலையில் எங்களது பிள்ளையின் சடலம் இருப்பதாகக் கேள்வியுற்று நாங்கள் அங்கே சென்றவேளை அவரை வைத்திய சாலையில் சேர்ப்பித்தவர்கள் இருவர் பொய்யான பெயர் கொடுத்துள்ளனர் என்ற விடயம் தெரியவந்தது. ஏன் பொய்யான பெயர் கொடுக்க வேண்டும்? அன்றையதினம் அவர் யாருடன் பேசினாரோ அவ்வளவு விபரங்களும் கைபேசியில் இருந்து அழிக்கப்பட்டிருந்தது. எங்களுடைய தம்பி ஒருவர் கைபேசியை வாங்கும் போது அங்கிருந்த ஒருவர் கைபேசியைப் பறித்தார். ஒரு மணித்தியாலம் அந்தக் கைபேசியை வழங்கவில்லை.

சடலம் தாண்டு இருந்த இடத்தை நீதவானுக்குக் காட்டிய பொலிஸார் பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டனர். பிறகு அவர்கள் வரவில்லை. எங்களிடம் விசாரணைகளுக்கு வந்த பொலிஸார், நீதிமன்றத்தில் நீங்கள் சட்டத்தரணி வைக்க வேண்டாம். நாங்கள் உங்களுக்காக வாதாடுகின்றோம் என்றனர்.

அவரது உடலைத் தொட்டவேளை உடலில் சூடு இருந்தது. ஆகையால் சடலத்தை பிரேத அறையில் போட வேண்டாம் என நாங்கள் கூறியவேளை அவரது நண்பர்கள் சடலத்தை பிரேத அறையில் போடுமாறு விடாப்பிடியாக கூறினார்கள். அவருக்கு அங்கே சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற சந்தேகம் எழுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் உறவினர்கள் வைத்தியசாலையில் இல்லை.

சிவரூபன் என்ற பெயரிலேயே கையொப்பமிட்டு அவரை வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர். ஆனால் அந்த சிவரூபன் யார் என இதுவரை எமக்கு தெரியவில்லை. உடனிருந்த நண்பர்கள் யாரும் இதுவரை சடலத்தைப் பார்ப்பதற்கு வீட்டுக்கு வரவில்லை.

கொடிகாமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தான் கொடிகாமம் பொலிஸ் இல்லை பருத்தித்துறை நிலைய பொலிஸ் என்று மந்திகை வைத்தியசாலையில் வைத்து கூறியுள்ளார். ஆனால் அவர் கொடிகாமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர். அவர் ஏன் பொய் கூற வேண்டும்?

இந்தச் சதியில் ஈடுபட்ட 4பேரை எமக்குத் தெரியும். ஆனால் இதில் பலர் தொடர்புபட்டதாக கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தை சிலர் காணொளியும் பதிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே அந்தக் காணொளி யாரிடம் உள்ளது என்று தேடிப் பிடிப்பதோடு, நாங்கள் கூறுகின்ற நான்கு பேரிடமும் விசாரணைகளை மேற்கொண்டால் என்ன நடந்தது எனக் கண்டுபிடிக்க முடியும் என மரணமான சிவராசா சிலுசனின் பெற்றோர் தெரிவித்தனர். (ம-7)

## ஆவரங்காலில்...

தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணவிசாரணைகளை யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து பொலிஸாரால் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் முன்னடுக்கப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் கிருமிநாசினியை உட்கொண்டமையினாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7)

## அநுர அரசு...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்று அரிசி, பால்மா, தேங்காய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்து நாட்டு மக்களின் உடனடித் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அரசாங்கமாக இந்த அரசாங்கம் காணப்படுகிறது.

எரிபொருள் சலுகை வழங்குவதாக கூறினாலும் இதுவரை இவர்களால் வழங்க முடியாதுபோயுள்ளது. மின்சார கட்டணத்தைக் கூட இவர்களால் முறையாகக் குறைக்க முடியாதுபோயுள்ளது.

மின்கட்டணத்தை 33% குறைப்பதாகச் சொன்னார்கள். கனமழையில் இலாபம் ஈட்டும் போதும் மின்சார சபை மின்கட்டணத்தைக் குறைக்க முடியாது எனத் தெரிவித்தது. பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு உண்மைகளை விளக்கியதால் 20% மின்கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது.

அடுத்த போகத்துக்கான வயல்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் உரமானியம் வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் உரங்களின் விலைகள் அதிகரிக்கும். யானை மனித மோதலினால் பாரிய சேதம் ஏற்படுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை. இது விவசாய சமூகத்தையும் முழு நாட்டையும் ஏமாற்றும் நடவடிக்கையாகும். இந்தப் பிரச்சினைகள் எதற்கும் அரசாங்கத்திடம் பதில் இல்லை என்றார். (ம-7)

## குறுகிய காலத் ...

வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தொடர்பான விசாரணைகள் தற்போது சுயாதீனமாக நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, நீதிமன்றங்கள் உள்ளிட்ட சட்டத்துறைகள் மற்றும் நிறுவனங்களால் எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் தொடர்புடைய குற்றவாளிகள் முறையாக தண்டிக்கப்படுவதை உறுதி செய்ய தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். (ம-7)

## மரண அறிவித்தல்

### திரு வைத்திலிங்கம் கதிரவேலு

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)



பிறப்பு 28.07.1934 இறப்பு 17.04.2025

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சி, கனடா Mississauga ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் உருத்திரபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கதிரவேலு அவர்கள் (17.04.2025) வியாழக்கிழமை அன்று கிளிநொச்சியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகமுத்துபிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை மற்றும் சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியர்களின் அன்பு மருமகனும் பராசக்தி மற்றும் வள்ளியம்மை (ஆசிரியர்) ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனேஸ்வரன், பிரேமாராணி, தங்கேஸ்வரன் (இந்திரன்), சத்தியேஸ்வரன் (ரூபன்), பவானி, கிருபாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ருபேந்திரராசா, பவானி, வக்சலா, பாலசந்திரன், கோபாலநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சபாரட்னம், கைலாயப்பிள்ளை, சுப்பிரமணியம், குமாரசாமி, குணநாயகி மற்றும் யோகம்மா, தையல்நாயகி, பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, தங்கம்மா, கமலம், நாகலிங்கம், கனகரட்ணம், நடராசா, செல்லம்மா, சாம்பசிவம், ஆறுமுகம், கிருஸ்ணபிள்ளை, அன்னக்கிளி, செல்வமணி, முத்துக்குமார் மற்றும் பூரணம், பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நேசிகா, அஸ்வின், சிவராஜி, விஸ்ணு, பவிஷன், சுரீன், அபினா, பவித்திரன், திவ்யன், சஸ்டி ஆகியோரின் அன்புப் பேரனும் நெபீஸ் அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சி 283, சிவசுந்தரம் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குடும்பத்தினர்

(C-2753)

புதுக்கடை திறப்பு விழா
யாழ்ப்பாணத்தில்
கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் தினந்தோறும் திறக்கப்படுகின்றது.
விலை விபரம்:
புறோயிலர் இறைச்சி - 950/=
கல்பேட் இறைச்சி - 950/=
பேரன்ஸ் இறைச்சி - 1100/=
ஊர் சேவல் - 1300/=
முட்டை (1) - 25/=
இவை அனைத்தும் எம்மிடம் எப்போதும் மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.
நியூ சிற்றி கோழிக்கடை
பொம்மைவெளி, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம்.
077 468 3354
(3976)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புகள் மனித குலத்தின் உயரிய சொத்தாகும், அதுவே நம் வாழ்வை ஜொலிக்கச் செய்கிறது. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இருந்ததில் இருப்பதில் நல்லது எது என அறிக!

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து நல்லூர் சங்கிலியன் தோப்பில் ஆற்றிய உரை தமிழ் அரசியல் தரப்புகளிடையே சலனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவில் தமிழ் அரசியல் தரப்புகள் தம் மனவில் கடும் முறுகல் நிலையில் உள்ளன.

அவர்களுக்கிடையே ஒற்றுமையில்லை. இதனால் மக்களின் ஆதரவும் இல்லை. அதேநேரம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கான ஆதரவு அலை யாழ்ப்பாணத்தில் - தமிழ்ப் பகுதிகளில் வீசுவதைக் காண முடிகிறது.

இந்தநிலைமை தமக்குப் பேராபத்தாகும் என்பதை தமிழ் அரசியல் தரப்புகள் உணர்ந்து கொண்டாலும் அவர்களால் ஒன்றுபட்டு செயற்படமுடியவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மிக மோசமானவர் என நம் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறத் தலைப்பட்டுள்ளனர்.

என்ன செய்வது எடுத்த எடுப்பில் எப்படியும் கதைக்கலாம் என்ற எங்கள் தமிழ் அரசியல் வாதிகளிடம் இருக்கக்கூடிய மிக மோசமான மனநிலை எங்கள் இனத்துக்கு ஈனமாகி விட்டது.

இதன் காரணமாகவே தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட தமிழ்ப் புத்திஜீவிகளைக் கொண்ட அமையம் நிறுவப்பட வேண்டும் என்ற கருத்தை இவ்விடத்தில் பல தடவைகள் முன்வைத்தோம்.

இருந்தும் பதவிகளுக்காக அரசியலில் இறங்கலாமே தவிர, மற்றும்படி தமிழ் மக்களின் நலன் சார்ந்து அரசியல் செய்வதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது நம் புத்திஜீவிகளின் நிலைப்பாடாக உள்ளது.

உண்மையில் நம் தமிழ் அரசியல்வாதிகள் எப்படியும் கதைக்கலாம் என்ற நிலைமை இருக்கும்போது, அதனால் ஏற்படக்கூடிய பாதகம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கு மானதென்பதை உணர்ந்து கொள்வதற்கு நம் மத்தியில் ஒப்புரவாளர்கள் இல்லாமல் போனமை துரதிர்ஷ்டமே.

எதுவாயினும் இது தொடர்பில் நம் தமிழ் மக்கள் பொது நிலையில் நின்று சிந்திக்க வேண்டும்.

ஏனெனில் இன்றைய நம் ஈழத் தமிழர்களின் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.

ஆன அரசியல் தலைமை இல்லை. அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமையில்லை. எமக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கான இராஜதந்திர அணுகுமுறைகள் இல்லை. உலக நாடுகளின் ஆதரவும் இல்லை.

இதையும் கடந்து, எங்கள் தமிழ்த் தேசியத்தின் கைகளில் இருந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் தேசியக் கட்சியின் கைக்கு மாறிவிட்டது.

இந்த நிலையில் தமிழ் மக்கள் தொடர்பில் எடுக்கப்படக்கூடிய தீர்மானங்களையும் தோற்கடிக்கும் வகையில் தமிழ்த் தரப்புகள் செயற்படுமாக இருந்தால், அது எம் இனத்துக்கு நாம்செய்கின்றமிகமோசமானஈனத்தனமாகும்.

எனவே இந்த நாட்டின் ஆட்சியில் இருந்த - இருக்கின்றவர்களில் யார் பரவாயில்லை என்ற முடிவை எடுத்துக் கொண்டு; அவர் மூலமாகச் சாதிக்கக்கூடியவற்றைச் சாதிப்பது தான் புத்திசாலித்தனமாகும்.

# தே.ம.சக்தி கைப்பற்றாத சபைகளுக்கு நிதி ஒதுக்கமாட்டேன் என நான் கூறவில்லை

## குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் ஜனாதிபதி அநுர

தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கப்படாது என்று தான் ஒருபோதும் கூறவில்லை எனவும் நிதி ஒதுக்கீடு தொடர்பாக தான் சமீபத்தில் தெரிவித்த கருத்துக்கள் எதிர்க்கட்சிகளால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படாது என்று தான் கூறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நேற்று நுவரெலியாவில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய ஜனாதிபதி மேலும் தெரியவருவதாவது,

மத்திய அரசால் ஊழல் நிறைந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படாது என்று மட்டுமே கூறியதாகக் கூறினார் தேசிய மக்கள் சக்தி கட்டுப்பாட்டில் உள்ள கவுன்சில்கள் மட்டுமே அவற்றைப் பெறும் என்பது அதன் பொருளல்ல.

"உள்நாட்டு வருவாய்த் துறையுடனான தினசரி சந்திப்புகள் மற்றும் சுங்கத் துறையை நெருக்கமாகக் கண்காணித்தல் மூலம் தற்போது திறைசேரியிடம் உள்ள பணத்தை நாங்கள் சேகரித்துள்ளோம். கவனமாக சேகரிக்கப்பட்ட அந்தப் பணத்தை ஊழல் நிறைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்க முடியாது.

"மத்திய அரசு திருடாமல், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்ந்து திருடும்போது என்ன நடக்கும்? மத்திய அரசு வீண் விரயத்தைத் தவிர்க்கும் அதே வேளையில், பிரதேச சபைகள் பணத்தை வீணாக்குகின்றன.

மத்திய அரசு தனது கடமைகளைச் செய்கிறது, ஆனால் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களைக் காட்டிக் கொடுக்கின்றன. மக்களின் பணத்தை நாம் ஏன் தெரிந்தே இதுபோன்ற நிறுவனங்களுக்கு ஒப்படைக்க வேண்டும்?"

மத்திய அரசால் கவனமாக சேகரிக்கப்படும் நிதி - மக்களின் பணம் - பிரதேச சபைகளுக்கோ அல்லது நகர சபைகளுக்கோ தவறாகப் பயன்படுத்தப்படுவதற்காக ஒப்படைக்கப்படாது என்பதை தெளிவாகக் கூறுவதாக ஜனாதிபதி திஸாநாயக்க மீண்டும் தெரிவித்தார். (ம-7)

# பிள்ளையான் வாய் திறந்தால் பலரது முகத்திரைகள் கிழியும்

## அதைத் தடுக்கவே கம்மன்பில பாடுபடுகிறார் - ஹிருணிகா சாட்டை

பிள்ளையான் பல குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய முக்கிய சாட்சியாளன் பிள்ளையான் வாய் திறந்தால் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் பலரது தகவல்கள் வெளியாகும் எனவே அவரது வாயை மூட சிலர் முயற்சிக்கின்றனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் ஏன் இதனை சரியாகக் கையாளவில்லை? உதய கம்மன்பில பிள்ளையானை தேசிய வீரர் எனக் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் அரசாங்கம் ஏன் பதிலளிக்கவில்லை? இது தொடர்பில் விசாரணைகளேனும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பிள்ளையான் இராணுவத்துக்கு உளவுத் தகவல்களை வழங்கியமை பொய் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஊடாக இராணுவத்துக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறிருக்கையில் கம்மன்பில போன்றோர் குறிப்பிடும் விடயங்கள் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கக் கூடிய வையாகும்.

பிள்ளையான் போன்றோரது குரலை முடக்குவதற்காக முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். பிள்ளையான் என்ற நபர் மிக முக்கிய சாட்சியாளராவார். எனவே அவருக்கு வழங்க வேண்டிய சகல பாதுகாப்புக்களை வழங்கி அவருக்கு சுயாதீன சட்டத்தரணிகள் குழுவொன்றை வழங்க வேண்டும். பிள்ளையான் வாயைத் திறந்தால் எமது நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் குறித்த தகவல்கள் வெளிவரக்கூடும்.

எனவே அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான பணியாளராகவே கம்மன்பில தன்னை சட்டத்தரணியெனக் காண்பித்துக் கொண்டு பிள்ளையானை சந்திக்கின்றார். அவரை எவரேனும் இதற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். எனவே அரசாங்கம் இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும் என்றார். (ம-7)

# காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - ஹொரவ் பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சியம்பலாவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹொரவ்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹொரவ்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

குறித்த நபர் அதிகாலை வேளை வீட்டிலிருந்து வெளியே சென்ற போது வீட்டிற்கு முன்பாக நின்றுகொண்டிருந்த காட்டு யானை தாக்கியுள்ளது.

அதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகப் ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

புனித வெள்ளியன்று

# தேவாலயத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம்

புனித வெள்ளி தினமான நேற்று முன்தினம் பொலநறுவை மன்னம்பிட்டிப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்ற போது அங்கு எவரும் இருக்கவில்லை என்றும் தேவாலயகத்தின் யன்னல்களின் கண்ணாடிகள் மீதே துப்பாக்கி ரவைகள் பாய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், மன்னம்பிட்டி பிரதான வீதியில் வசிக்கும் 38 வயதுடைய நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த தேவாலயத்தின் மத போதகர் உடனான தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. மாவட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்ட போட்டியின் முடிவு







(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்திய அமரர் சௌந்தரநாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயமும் பெண்கள் பிரிவில் நெளுக்குளம் மகாவித்தியாலயமும் வெற்றி வாகை சூடியது.

குறித்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

பரபரப்பான இறுதிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமும், பெண்கள் பிரிவில் நெளுக்குளம் மகாவித்தியாலயமும் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன்போது வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக்கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

சங்கத்தின் இணைப்பாளர் இ.சற்சொரூபன் தலைமையில் இடம்பெற்ற இப் போட்டியில் வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர் விஸ்னு, யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத் தலைவர் பாபு, அனுசரனையாளர் சார்பில் சௌந்தரநாயகம் பிரதாபன் மற்றும் ரவீந்திரன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் அமலன், சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களான ஜனகரன், ரெஜினோல்ட் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-250)







சித்திரைப் புத்தாண்டினை சிறப்பிக்கும் முகமாக இலங்கைப் பாதுகாப்பு படைப்பிரிவின் 59 ஆவது காலாற் படையணியின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை மைதானத்தில் நேற்று விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

# தலைமன்னார் முதல் தனுஷ்கோடிவரை நீந்திக் கடந்த மாற்றுத்திறனாளி



(மன்னார்)

இயலாமைக்கும் சாதனைக்கும் உள்ள தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைக்க வேண்டும் என்ற லட்சியத்துடன் ஒரு காலை இழந்த மாற்றுத்திறனாளியான நீச்சல் வீராங்கனை இலங்கை தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலினை 11 மணி 5 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

தலைமன்னாரிலிருந்து தனுஷ் கோடிக்கு நீந்தி கடப்பதற்காக கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட வட மாநிலத்தை சேர்ந்த 10 பேர் கொண்ட நீச்சல் வீரர்கள் குழு இந்திய-இலங்கை இரு நாட்டு அரசிடமும் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர்.

அனுமதி கிடைத்த நிலையில், நேற்று முன்தினம் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஆழ்கடல் படகில் இலங்கை தலைமன்னார் நோக்கி சென்றனர்.

இந்த குழுவில் 8 பேர் தலைமன்னாரில் இருந்து அதிகாலை 5.50 இற்கு கடலில் குதித்து நீந்த தொடங்கி மதியம் 2.20 மணி அளவில் தனுஷ்கோடி வந்தடைந்தனர். இவர்கள் ரிலே முறையில் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை 8 மணி நேரம் 30 நிமிடத்தில் நீந்திக் கடந்தனர்.

மேலும் இருவர் தனியாக நீந்தி கடந்தனர். அவ் இருவரும் மாற்றுத் திறனாளிகள். இதில் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த சஷ்ருதி நக்காது என்ற நீச்சல் வீராங்கனைக்கு வலது காலில் பிறவி குறைபாடு காரணமாக மேல் மூட்டு துண்டிக்கப்பட்டு, செயற்கையாக வடிவமைக்கப்பட்ட காலை கொண்டு நடக்கும் மாற்றுத்திறனாளியான இந்நபர் பாக் ஜலசந்தி கடலை நீந்தி சாதனை புரிவதற்காக வெள்ளிக்கிழமை அதிகாலை 5.50 மணி அளவில் தலைமன்னாரில் இருந்து கடலில் குதித்து நீந்த தொடங்கி மாலை 4.55 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கரையை அடைந்தார். இந்த சாதனைக்காக 11 மணி 5 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்.

அரிச்சல்முனை வந்தடைந்த சஷ்ருதி நக்காதவை அவரது தாய் கண்ணீர் மல்ல முத்தமிட்டு வரவேற்றார். அதே போல மற்றொருவரான மாற்றுத்திறனாளி பல்கா கணேஷ் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை 10 மணி 30 நிமிடத்தில் நீந்தி கடந்தார். அவ் இருவரையும் சுங்கதுறை கண்காணிப்பாளர், மரைன் பொலிஸார் உள்ளிட்டோர் வரவேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-285)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 400 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 600 | 450 | 500 |
| தக்காளி | 500 | 600 | 700 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 280 | 250 | 200 |
| கோவா | 350 | 350 | 350 | 300 | 400 |
| கரட் | 600 | 600 | 600 | 500 | 500 |
| பூசணி | 250 | 220 | 300 | 240 | 250 |
| புடோல் | 200 | 250 | 250 | 200 | 400 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 500 | 400 |
| வெண்டக்காய் | 300 | 350 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 300 | 250 | 300 |
| பயற்றங்காய் | 150 | 250 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 350 | 400 | 450 | 300 | 500 |
| கறிமிளகாய் | 600 | 550 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 2500 | 2400 |
| போஞ்சி | 400 | 550 | 800 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 350 | -- | 450 |
| கீரை – 1 பிடி | 120 | 80-120 | 150 | 90 | 100 |
| தேசிக்காய் | 250 | 150 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 280 | 150 | 200 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 650 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 200 | -- | 400 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| [illegible] | 60 | 70 | 100 | 80 | 80 |
| [illegible] | 100 | -- | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச சேவையில்...

கைக்காக பத்தாயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அநுராதபுரம் நகர மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பட்டதாரிகள் போட்டிப் பரீட்சைகள் மூலம் வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

அத்தோடு இந்த ஆண்டு இரண்டாயிரம் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)

## நாட்டில்...

வாக்களிக்கும் நிலைமை காணப்பட்டது.

ஆனால் கடந்த தேர்தலின்போது மக்கள் இந்நிலைமையை மாற்றியமைத்தனர். அனைவரும் தேசிய மக்கள் சக்திக்குப் பின்னால் திரண் டனர். எனவே அனைத்து மக்களையும் சமமாக நடத்தக்கூடிய அரசாங்கமொன்றே தேவை. அவ்வாறானதொரு அரசாங்கமே தற்போது ஆட்சியில் உள்ளது.

இந்நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்கமாட்டோம். இனவாதத்தைத் தோற்கடிப்பதற்கு நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் போதவில்லையெனில் புதிய சட்டங்களை இயற்றியாவது இனவாத அரசியல் தோற்கடிக்கப்படும்.

எமது நாட்டில் மக்களுக்கிடையில் மீண்டும் போர் ஏற்படாத வகையிலான நாடொன்றை நாம் கட்டியெழுப்புவோம்" என்றார். (ம-7)

## அனுதாபத்தை...

ஹந்துநெத்தி குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பிள்ளையான் தொடர்பில் கடந்த காலங்களில் சிங்கள பௌத்தவாதம், தேசியவாதம் பற்றிப் பேசிக்கொண்டிருந்த உதய கம்மன்பில, தற்போது உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக பிள்ளையானை மாற்றியமைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக சொல்லிக் கொண்டு திரிகிறார். குண்டுத்தாக்குதல் விவகாரத்துக்காக பிள்ளையான் கைது செய்யப்படவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ஒருவரைக் கடத்தி காணாமலாக்கிய குற்றச்சாட்டின் விசாரணைகளுக்கு அமைவாகவே முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்பட்டுள்ளார். குண்டுத்தாக்குதல் விவகாரத்தில் அப்பாவி ஒருவரை அரசாங்கம் கைது செய்துள்ளதாக அனுதாபத்தை ஏற்படுத்தவே உதய கம்மன்பில முயற்சிக்கிறார்.

பிள்ளையான் 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சிறையில் இருந்தார். 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கும் அவருக்கும் தொடர்பில்லை என்று உதய கம்மன்பில குறிப்பிடுகிறார்.

பிள்ளையான் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் உதய கம்மன்பில ஏன் முந்திக்கொள்கிறார். கம்மன்பில திணறாமல் சற்று அமைதியுடன் இருக்க வேண்டும். பிள்ளையான் தேசிய வீரன் என்று உதய கம்மன்பில குறிப்பிடுகிறார். இதனை ஏற்றுக் கொள்வதா என கேள்வி எழுப்பினார். (ம-7)

## ஜனாதிபதியின்...

ஊடகங்களிடம் நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வடக்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் ஆற்றிய உரைகளைத் தமிழ்த் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். ஜனாதிபதியின் உரையை விமர்சிக்கத் தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு எந்த அருகதையும் கிடையாது.

வடக்குக்குச் சென்ற ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டே உரையாற்றியுள்ளார். அவரின் உரை தமிழ்க் கட்சியினருக்குத் தேர்தல் தோல்விப் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் அவர்கள் உளறுகின்றார்கள். தமிழ் மக்களின் எமக்கான ஆதரவைத் தமிழ்க் கட்சியினரால் தடுத்து நிறுத்த முடியாது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவோ அல்லது அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்திக் கட்சியினரோ ஒருபோதும் இனவாத, மதவாத அரசியலை ஆதரிக்கமாட்டார் கள்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் வைத்துத்தான் வடக்கிலும், தெற்கிலும் கடந்த காலங்களில் அரசியல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கு முடிவு கட்டும் வகையிலேயே தேசிய மக்கள் சக்தியை நாட்டு மக்கள் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

வடக்கில் திஸ்ஸ விகாரையை வைத்து இனவாத அரசியலை முன்னெடுக்க எமது அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்றார். (ம-7)

## அன்...

அமைதிப் படைக்கு எதிராக அன்னை பூபதி அறப் போராட்டத்தினை முன்னெடுத்தார்.

"உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்", "புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்" ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988 மார்ச் 19ஆம் திகதி அன்னை பூபதி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

அன்னை பூபதி நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன.

உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும் இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45 மணிக்கு அன்னை பூபதி உயிர் நீத்தார். (ம-7)

## சொன்னதை...

தேசிய மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அத்துடன், வேறு எந்த அரசாங்கமும் இவ்வாறு செயற்பட்டது இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி கட்சி ஆட்சியைப் பிடித்தபோது, பொருளாதாரம் பூஜ்ஜியமாக சரிந்து மக்கள் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(ம-7)










































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ave Maria
# Velankanni
# වේලාන්කන්නි
# வேளாங்கன்னி

INDO-SRILANKAN SEA CRUISE From KKS JAFFNA

LKR.55,000/-
03 Nights & 04 Days

- Per Person/ 3 star AC Twin sharing with breakfast
- Harbour to Hotel and return A/C transport included
- No other food or Drinks Included
- Departures 6 Days a Week
- Single Person to Groups

## Ashokavatika Holidays
Since 1998

+94 777 360 353
+94 113 499 995
No.51,Amman Road,
Nallur, Jaffna.

Need Islandwide Full/ Part time Agents.



(C-2749)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 222/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 259/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கீரி சம்பா | - 260/= | Max 2Kg |
| 1Kg கடலை | - 390/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 700g சுபோஷா | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 180Ml சில்க் சம்போ | - 370/= | ~~480/=~~ |
| 1.5 ℓ பெப்சி சோடா | - 315/= | ~~360/=~~ |
| 1Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 270/= | ~~320/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~

01 யோக்கட் 45/= ~~70/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(1047)

Happy Supermarket
0777 8080 30

## வேலையாட்கள் தேவை

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினால் பராமரிக்கப்படும் தந்தை செல்வா கலையரங்கத்திற்கு வினைத்திறனுடன் வேலை செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள 30- 50 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் பராமரிப்பு சுத்திகரிப்பாளர்கள் தேவையாகவுள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
- EPF, ETF வழங்கப்படும்
- வேலையாளர் காப்புறுதி மற்றும் தனிநபர் விபத்துக் காப்புறுதி வழங்கப்படும்

ஏனையவைகள் நேர்முகத்தேர்வில் கலந்துரையாடப்படும். உங்கள் சுயவிபரக்கோவையை 30.04.2025 இற்கு முன்னர் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க முடியும்.

முகாமையாளர்,
தந்தை செல்வா கலையரங்கம்
114,ராஜேந்திரப் பிரசாத் வீதி, (யாழ்/ மத்திய கல்லூரிக்கு அருகாமை) யாழ்ப்பாணம்.
மேலதிக தொடர்புகளுக்கு- 077 004 4596
(3968)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
Special offer 50% Discount to all the Courses
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970
(3844)

## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.

- மதிய உணவு வழங்கப்படும்.
- சம்பளம் :- நாள் ஒன்றிற்கு 4.000/=
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு :
077 937 0000, 075 988 1000
(1045)

## பௌதிகவியல் (A/L)

2025/ 2026/ 2027/ Repeat
தனிப்பட்ட / குழு வகுப்புக்கள்

- கடந்த கால வினாக்கள்
- பாடத்திட்டப்படி அலகுகள் பூர்த்தி செய்தல்
- சந்தேகங்களுக்கு விளக்கம்

Home Visit Available
ஆ.நித்தியானந்தன் BSc, Dip-in-Ed
076 799 9005
15, பழம் வீதி, கந்தர்மடம்
(3965)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



கடந்த 30.04.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

திருமதி
தி. சுசீலனாதேவி

அவர்களின் மறைவின் நினைவேந்தல் இன்று 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அந் நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளத் தாங்கள் குடும்பத்துடன் வருகை தருமாறு தங்களை அன்போடு அழைக்கின்றோம்.

திருமதி தி. சுசீலனாதேவி அவர்கள்
மறைந்த ஓராண்டின் நினைவுச் சுடர்!!
(ஏப்ரல் 2024 – ஏப்ரல் 2025)

வாடாத உனது வண்ண முகம் மனசெங்கும்
சூடிய மாலையெனச் சிரிக்கும்
நீடிய காட்சிகள் நாளெல்லாம் எழுந்தே
தேடுதே உன்னை எங்கிருப்பாயென்று
வாடுகிறோம் வகையறியாச் சோகத்தினால் இங்கு
நீங்கிடுமோ உந்தனது நினைவுகள்தான்!
வீணாகிப் போனவுன் வாழ்வின் அர்த்தமென்ன
கோணாத பாசத்தின் பரிசாமோ?
சோதனையாய் உனக்களித்த இறைவரம் இதுவெனில்
சோதரியே உனையிழந்த ஓராண்டின்று...!!
பஞ்சமில்லா அன்பு தரும் தாயாக நீயிருந்து
வஞ்சமில்லா உள்ளத்துடன் வழிகாட்டி
நெஞ்சகத்தில் குடிகொண்ட உத்தமியே உன்னை
மிஞ்சியுள நாட்களிலும் மறந்திடலாமோ...?

மாதா கோயில் வீதி, குறுக்கு றோட்,
நீர்வேலி வடக்கு.
(1030)
மறவாத அன்பேடு
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும், பண்ணை அமைப்பதற்கும் உகந்த 9 பரப்பு நல்ல செம்மண் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
076 419 6358
(3970)

## மணமகள் தேவை

(பதிவு இலக்கம் 01131) கனடா Pr 40 வயது ரோகினி நட்சத்திர மணமகனுக்கு இலங்கையில் மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
சொர்க்கம் திருமண சேவை
கனடா
0014166661855
இலங்கை
077 887 6969
(1046)

தேன் ஒரு அருமருந்து. சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.

## Royal றோயல் சுத்தமான தேன்

உங்கள் முழுக் குடும்பத்தின்
ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.



ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(...வைத்தியசாலைக்கு ... அருகாமையில்)
தொ.பே: 021 2222 507

Packed By:- Royal Industries®
(C-2748)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2750)

## பெண் ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் அலுவலகத்தில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
+16477645117
(whatsapp)
(1046)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.